# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு வைகாசிமாதம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 19-ம் இலக்கம்


# 2-வது வத்திக்கான் பொதுச்சங்கம்

## ஐக்கிய திருச்சபையை நிறுவுதலே முக்கிய நோக்கம்

இன்று கத்தோலிக்கமக்களின் கண்ணையும்கருத்தையும் ஒருங்கே ஈர்த்துகொண்டிருப்பது, வருகிற ஐப்பசிமாதம்11-ந்திகதி வியாழக்கிழமை பரிசுத்தகன்னிமரியம்மாளது தாய்மையின்திருநாளன்று பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பபாப்பரசர் மகாஆடம்பரவைபவங்களுடன் ஆரம்பித்து வைக்கவிருக்கும் இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கமேயெனில் மிகையாகாது. இச்சங்கத்தின் மகாமுக்கியமான நோக்கத்தை ஒருவாக்கியத்திலே எடுத்துக்கூறுகில், "ஓர்ஐக்கிய திருச்சபையை நிறுவுதலே" எனலாம். திருச்சபையாயாவது யேசுக்கிறிஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்டு, ஞானஸ்நானம்பெற்று, கிறிஸ்துஇரட்சகரின்போதனைகளை ஏற்றுக்கொள்ளும் சகலவிசுவாசிகளினதும் கூட்டமே. அது ஒரேதலைவரை உடையதாயிருத்தல் வேண்டும். யேசுக்கிறிஸ்துநாதர் உயிரோடிருந்த காலத்தில் அவரே திருச்சபைக்குத் தலைவராயிருந்தார். ஆனால், அது எல்லாக் காலத்துக்கும், எல்லா மக்களுக்கும், எல்லா இடத்துக்கும் பொதுவாயிருந்ததின் நிமித்தம் தமக்குப்பதிலாக அர்ச். இராயப்பரைத் தலைவராக யேசுக்கிறிஸ்துநாதர் நியமித்தார். அவருக்குப்பின் திருச்சபை உலகமுடிவுபரியந்தம் நிலைத்திருக்கவேண்டியிருந்ததால் வழுவாவரத்துடன் பாப்புமார் திருச்சபைக்குத்தலைவராய் இருந்திருக்கின்றனர், இருக்கின்றனர், இருப்பார்கள். இதை நாம் இதிகாசத்தைப் படிப்பதாலும், பாரம்பரியத்தை அறிவதாலும், வேதாகமத்தைவாசிப்பதாலும் நன்கு அறியலாம்.

ஆனால், நிகழ்ந்தது என்ன? காலகதியில் பதிதசபைகளும், பிரிவினைச்சபைகளும் காலத்துக்குக் காலம் தோன்றத்தொடங்கின. இவைகள் பத்தாம்நூற்றாண்டிலும், பதினாறும் நூற்றாண்டிலும் விசேஷமாகச் சண்டமாருதம்போல ஐரோப்பாமுழுவதிலும் பரவத்தொடங்கின. புரொட்டஸ்தாந்தமார்க்கமென்று பொதுவாகக்கூறப்படும் அநேகசபைகள் தோன்றின. மாட்டின்லூதர், யோண்கல்வின், ஜோன்நொக்ஸ், எட்டாம்என்றிஅரசன், கப்ரின் பூத் என்னும் பலதலைவர்கள் தோன்றிப் புதுமார்க்கங்களை நிலைநாட்டினர். ஆனால், அவர்களுடைய சமயபோதனைகள்யாவும் கிறிஸ்துநாதரின் போதனைகளிலிருந்து பலமாற்றங்களுடன் தோன்றினவைகளே. இந்தப்பிரிவினைச் சபைகளுக்கோ திருச்சபைக்கு இருக்கவேண்டிய நான்குஇலட்சணங்கள்[(1) ஒன்றுயிருத்தல், (2) பரிசுத்தமாயிருத்தல், (3) பொதுவாயிருத்தல், (4) அப்போஸ்தலரில்நின்று தொடர்ந்துவருகிறதாயிருத்தல்] இல்லாமை குறிப்பிடத்தக்கது. ஆனதுபற்றியே கிறிஸ்துநாதரின் ஞானச்சரீரமான திருச்சபையானது பிளவுபட்டுத் தோன்றுவதுபோல் காட்சியளிக்கிறது. "ஒரேமந்தை, ஒரேமேய்ப்பன்" என்ற தேவவாக்குக்கு முரணாக இச்சபைகள் இருந்துவருகின்றன.

பரிதாபகரமான, இப்பயங்கரமானநிலை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதைக்கண்ணுற்ற காலங்கண்ட நமது பரிசுத்த தந்தை "இம்மந்தைக்குச் சேராத" பிறஆடுகளையும் இம்மந்தைக்குள் கொண்டுவந்து சேர்ப்பதற்காகவே இப்பொதுச்சங்கத்தைக் கூட்டுகிறார்.

இப்பொதுச்சங்கம்மட்டில் கத்தோலிக்கராகிய எமது கடமைகள்தான் என்ன? முதன்முதலாக அதன்நோக்கத்தை நாம நன்குணரவேண்டும். அதைப்பற்றி இடையிடையே நாம் எமதுவிசுவாச நிலையைப்பற்றி எம்மையே ஆராய்ந்து பார்க்கவேண்டும். யேசுக்கிறிஸ்துநாதர் நமக்குப் போதித்த உண்மைகளை—திருச்சபையின் போதனைகளை நாம் முழுமனதோடும் விசுவசிக்கிறோமா? அல்லது "சமயம் ஒருதனிப்பட்டமனிதனின் கொள்கை"என்றவிதமாக நாம் விரும்பியவற்றை விசுவசித்து, விரும்பாதவைகளை விலக்கிநடக்கிறோமா? அவ்வாறாயின் எமது விசுவாசத்தை நாம்ஸ்திரப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். விசேஷமாக வேதாகமநூல்களை வாசித்து எமதுசமயஅறிவைப் பூரணப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இரண்டாவதாக [illegible] வரும் [illegible]

பிரிவினைச்சபைகளுக்காக மன்றாடவேண்டிய கடமையுடையோம். விசேஷமாக ஞானவெளிச்சத்தைக் கொடுக்குமாறு இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனை மன்றாடவேண்டும். அவர் பரலோகத்தில்நின்று தமதுபிரகாசத்தின் கதிர்களை முன்னொருநாள் அப்போஸ்தலர்மீது விட்டதுபோல் இச்சபையார்மீதும் வரவிட்டு அவர்களுடைய ஞானக்கண்களைத் திறந்து திருச்சபையோடு அவர்கள் ஒற்றுமைப்பட—ஒன்றுசேர மன்றாடவேண்டும்.

[8-ம் பக்கம் பார்க்க]

## அர்ச்சியசிட்டபட்டம் சூடினர்

### முத். மாட்டீன் தெ போறஸ்

ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே பரிசுத்த தந்தை 23-ம்அருளப்பபாப்பரசரால் சென்ற 6-ந் திகதி ஞாயிறுவாரம் சாமிநாதர்சபையின் ஒரு துணைச்சகோதரரான முத். மாட்டீன் தெ போறஸ் பெருமித ஆடம்பர வைபவங்களுடன் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்படலாயினர். இவர் அமெரிக்க சுதேசிகளிலே இரண்டாவது அர்ச்சியசிஷ்டவராவர். ஆனால், இவர் 1837-ம்ஆண்டு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பட்டதுமுதல் அவர்பக்தியானது அநேகதேசங்களில் பரந்து, பரலோகத்திலே அவரது அப்போஸ்தலத்துவம் உலகமடங்கலும் பரவியிருக்கிறதென்று சொல்லக்கூடியதாய் இருக்கிறது.

பெருநாட்டின் தலைப்பட்டணமாகிய லீமாநகரிலே அர்ச். மாட்டீன் தெ போறஸ் 1579-ம் ஆண்டுபிறந்தார். இந்நகரம் மற்றும் மூன்று அர்ச்சியசிஷ்டவர்களின்தும், முத்திப்பேறுபெற்றபட்டம் பெற்ற ஒருவரினதும் சொந்தநகரமாகத் திகழ்கின்றது. இவர்களெல்லாம் ஒரே நூற்றாண்டுகாலத்தில் வாழ்ந்திருந்தவர்கள். இவர்கள்எல்லோரும் மாட்டீன் தெ போறஸை நன்கறிந்தவர்கள்.

அமெரிக்காவின் முதல்அர்ச்சியசிஷ்டவளான லீமாநகரின் ரோசம்மாள் இந்நகரிலேயே பிறந்தாள். சாமிநாதர்சபைத் துணைச்சகோதரராயிருந்து செபத்திலும், தபத்திலும், நோயாளரைப் பராமரிப்பிலும் தமதுவாழ்க்கையைப் பங்கிடுசெய்தவரான புதியஅர்ச்சியசிஷ்டவரும் அங்குதானே பிறந்தார். ஓர்இஸ்பானிய வழக்கறிஞராயிருந்த லீமாநகரின் அதிமேற்றிராணியாரான அர்ச். தூறிபியுஸே அர்ச். ரோசம்மாளுக்கும், அர்ச். மாட்டீன் தெ போறஸூக்கும் உறுதிப்பூசுதல் அருளினார். புதியஉலகத்தின் முதலாவது குருமடத்தை அடியிட்டவரும் இவரே.

இந்தியர்களுக்கு ஒருபிரான்சிஸ்கன்சபை மிஷனரியாகவிளங்கிய அர்ச். பிரான்சீஸ் சொ[illegible]ணேவும், மாட்டீன் தெ போறஸைப்போலவே சாமிநாதர் சபைத் துணைச்சகோதரராயிருந்து ஏழைகளும், துன்பப்படுவோருமா[illegible]த் தம்மிடம் உதவிக்கு வராதவர்களையும் வீதிகளிலோ அன்றேல் அவர்களின் இல்லங்களிலோ தேடிக்கண்டடைந்து அவர்களுக்கெல்லாம் ஆனஉதவி புரிந்துவந்த முத். ஜோண் நாஸியாஸூம், லீமாநகரைச்சேர்ந்தவர்களே. அதனால் அந்நகர் குடியேற்ற ஆரம்பகாலத்திலே அர்ச்சியசிஷ்டவர்களைப் பிறப்பிக்கும் ஒரு நாற்றுமேடையாக விளங்குவதாயிற்று.

## பொதுச்சங்கத்திற்காக விசேஷ செபங்கள்

குருமாரும், சகலவிசுவாசிகளும் "நல்மனமுடைய எல்லாமக்களும்" இம்மாதத்திலே-விசேஷமாகத் தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இம்மாதத்திலே—பொதுச்சங்கத்தின் நோக்கத்துக்காக மன்றாடவேண்டுமென்று பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பபாப்பரசர் அதிகம் விநயமாய் அனைவரையும் வேண்டிக்கொள்ளுகிறார்.

இச்சங்கம் இனிதே நடைபெற்று மக்களுக்கு—குடும்பரீதியிலும், சமூகத்துறையிலுமே, அகிலஉலகத்துறையிலும்—நீதிநடைபெற மக்கள் தனிப்பட்ட முறையிலும், பொதுமுறையிலும் தருமம், பரோபகாரம், நீதிஎன்னும் புண்ணியங்களை மேலும் மேலும் அநுசரித்துவர வேண்டுமென்றும் அவர்வற்புறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## திருஇருதயசபை

யாழ்ப்பாண ஆசனக்கோயில் திரு இருதயசபை அங்கத்தவர்களின் மாதாந்தகூட்டம் சென்ற 6-5-62 ஞாயிறு பி. ப. 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் பரிமேலர் சூ. அருளானந்தம் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அத்தருணம வண. ஏ. இராசநாயகம் சுவாமிகள் "திருஇருதயப்பத்தி" என்ற விஷயமாய் அரியதொரு சொற்பொழிவாற்றினர். அவர் இப்பத்தி யேசுக்கிறிஸ்து நாதராலேயே ஏற்படுத்தப்பட்ட ஒரு பத்தியென்று குறிப்பிட்டார், அதன் மூவித அம்சங்களாகிய விசுவாசம். சிநேகம், நிந்தைப்பரிகாரம் என்பனவற்றை எடுத்துக்காட்டி இனிதே விளக்கினர்.

வருகிறமாதம் வரும் திருஇருதய திருநாளை அங்கத்தவர்கள் திரிதின ஆராதனைகளுடனும் புதுஅங்கத்தவர்களைச் சேர்ப்பதுடனும் கொண்டாட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. சவுந்தரநாயகம், திரு. ஜே. ஏ. வி. சில்வெஸ்ரர் ஆகியோர் கூறிய நன்றியுரையுடனும், அக்கிராசனரின் குறிப்புரையுடனும் கூட்டம் வழமையான செபத்துடன் நிறைவெய்தியது.

## கத்தோலிக்க தொழிலாளர்விழா

இருகலையிலுள்ள தமிழ்க்கத்தோலிக்க சேவாசங்கத்தினர் வைகாசி 1-ந் திகதியை முதன்முறையாகக் கத்தோலிக்க தொழிலாளர் விழாவாகப் பரிசுத்த ஜெபமாலை நாயகியின் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடினர். விழாவைக் கண்டியின் முன்னாள் மேற்றிராணியாரான 'மகாவந். றெஞ்ஞோ ஆண்டகை வருகைதந்து சிறப்பித்தார்கள், காலை 7 மணிக்குப் பங்குக்குரவர் வண. சி. சூசைப்பிள்ளை சுவாமிகளால் பூசைப்பலி நிறைவேறியது. 9 மணிக்கு ஆண்டகை அவர்கள் பூசைப்பலி நிறைவேற்றித் "தொழிலின் பெருமை"யைப்பற்றி அரியதோர் பிரசங்கம் செய்தார். பின்னர் தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. அவ்வேளை பாவாலும், மனப்பூவாலும் அவரைத் துதித்து ஏராளமான விசுவாசிகள் அதில் கலந்துகொண்டனர். நண்பகல் 12 மணியளவில் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் விழா இனிதே முடிவெய்தியது.

## தாண்டவன் வெளிச்செய்தி குரவருக்கு பிரியாவிடை

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. எல். ஆர். அன்ரனிசுவாமியவர்கள் திருகோணமலை மேற்றிராசனத்திலே கடந்த நான்குஆண்டுகளாக ஆற்றியசேவையைப் பாராட்டுமுகமாகச் சென்ற 30-4-62 திங்கட்கிழமை தாண்டவன்வெளிப் பங்குவிசாரணைக் கத்தோலிக்கசங்கத்தால் ஓர்தோட்ட விருந்து உபசாரணை நடாத்தப்பட்டது. அதில் பங்குபற்றிய அங்கத்தவர்பலரும் சுவாமிஅவர்கள் தாண்டவன்வெளிப் பங்குக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகளுக்குப் பக்கதுணையாயிருந்து பங்கில் செய்துள்ள அரியசேவைகளையும், அவரின் குணாதிசயங்களையும் பாராட்டிப்பேசினர்.

ஈற்றில், பிரியாவிடைநாயகர் பேசுகையில், தாம் திருகோணமலை மேற்றிராசனத்துக்குவந்து எங்கள்பங்கில் தான் அதிகசேவைசெய்யத் தருணம் கிடைத்ததென்றும், எங்கள் பங்கில் வேலைசெய்வது தமக்கு மகிழ்ச்சிகரமாய் இருந்ததென்றும், எங்கள் பங்கு செப, தப, வேண்டுதல்களிலும், மற்றும் ஆராதனைகளிலும் அதிகம்சிறந்து இதனைச் "சின்னரோமை" என்றே கருதச்செய்துவிட்டதென்றும் கூறித் தாம் என்றும் இப்பங்குக்காக மன்றாடுவதாக வாக்குறுதியளித்தார்.

சுவாமியவர்களின் திருக்கர ஆசிருடன் இவ்வைபவம் முடிவெய்தியது. அவர் சென்ற 2-5-62-இல் திரும்பவும் தமதுமேற்றிராசனத்துக்குப் புறப்பட்டுச்சென்றார்என்பது குறிப்பிடத்தக்கது.

—நிருபர்.

## நுவரெலியிலே

# கண்டி மேற்றிராசன கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் 2-வது மாநாடு

கண்டி மேற்றிராசன கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் இரண்டாவது மாநாடு சென்ற 29-4-62 ஞாயிற்றுக்கிழமை நுவரெலியிலே அதிகம்கவர்ச்சிகரமான முறையில் நடந்தேறியது. அதன் முதலாவதுமாநாடு 1955-ம் ஆண்டு நாவலப்பிட்டியில் நடந்தேறியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டின் ஆரம்பவைபவமாக அன்றுகாலை 8 மணிக்குக் கண்டிமேற்றிராணியாண்டவர் நுவரெலி அர்ச். சவேரியார்ஆலயத்தில் திவ்வியபூசை நிறைவேற்றினர். கண்டி மேற்றிராசனத்தின் பலபாகங்களிலிருந்தும் சுமார் இரண்டாயிரம் பார்வையாளர் புகையிரதமார்க்கமாகவும், பஸ்வண்டி, மோட்டார்வாகனம் வழியாகவும்வந்து மாநாட்டிலே கலந்துகொண்டனர். பூசையின்பின் வெளியூர்விருந்தினருக்கு நல்லாயன் கன்னியர்மடத்தில் காலைஉணவு அளிக்கப்பட்டது.

மாநாட்டின் முதலாவது கூட்டம் காலை 10 மணியளவில் அர்ச். சவேரியார்கல்லூரி மண்டபத்திலே நடைபெற்றது. "திருச்சபையில் இல்லறவாசிகளின் பங்கு" என்னும் விடயமே மாநாட்டில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயமாகும். கொழும்பு, கத்தோலிக்க சேவைப் பிரமுகரான திரு. ஏ. எஸ். எவ். பெரேராஅவர்கள் மாநாட்டுக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். அதன் பிரதமபேச்சாளர் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டக்றர் இல்லறி குரூஸ் அவர்கள். இவர் ஒரு மூன்றாம்சபை அங்கத்தவரும், சிறந்த சேவையாளருமாவார். மாநாட்டில் விவாதிக்கப்பட்ட விடயம் பற்றி இவர் உரைநிகழ்த்தினர். இந்த உரை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அச்சேற்றப்பட்டுச் சிறு கைநூல்வடிவிலே குழுமியிருந்தவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. உரையின்பின் மும்மொழிகளிலும் பேசப்பட்ட விடயம்பற்றிய சல்லாபம் தனித்தனியே இடம்பெற்றது.

மாநாட்டுக்கு வெளியிடங்களிலிருந்து வந்து சமுகமளித்தவர்களையும், பேச்சாளரையும், மகாவந். மேற்றிராணியாண்டவரையும், மற்றும் பிரமுகர்களையும் நுவரெலிப்பங்குக்குரவர் வண. டி. எம். சேவியர்சுவாமிகள் வரவேற்றார். பரிசுத்ததந்தை 23-ம் அருளப்ப பாப்பரசருக்கும், இலங்கைக் கவர்னர்—ஜெனறலுக்கும் விசுவாசபிரமாணிக்கம் தெரிவித்துக் கூட்டம் ஆரம்பமாயிற்று. 1955-ம் ஆண்டுமுதல் 1962-ம் ஆண்டுவரையுள்ள இடைக்கால அறிக்கை படிக்கப்பட்டது. அதன்மேல் விவாதம் ஆரம்பமாயிற்று. கண்டிமேற்றிராசன ஐக்கியசங்கத்தால் திரட்டப்பட்ட விவரங்களும், விளக்கங்களும் உரையாடலுக்கு உதவியாயிருந்தன.

மதியபோசனத்தின்பின் பிற்பகல் 2-00 மணிக்கு மாநாட்டின் இறுதிக் கூட்டம் ஆரம்பமாகிச் சுமார் 3-30 மணியளவில் முடிவெய்தியது. அதிலே ஆங்கிலம், சிங்களம், தமிழென்ற பேதமின்றி அனைவரும் ஒருங்கேகூடி அவரவர் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

ஈற்றில் கண்டிமேற்றிராணியார் மகாவந். லியோ நாணயக்கார ஆண்டகைஅவர்கள் நன்றியுரை நிகழ்த்தினர். வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்கும், பேச்சாளருக்கும் ஐக்கியசங்க சேவையில் உழைப்பவர்களுக்கும் நன்றிதெரிவித்தார்.

மாநாட்டுக் கூட்டத்தின்பின் 4-30 மணிக்கு அர்ச். சவேரியார் ஆலயத்தில் திவ்வியநற்கருணை எழுந்தேற்றம் செய்து அரைமணிநேர ஆராதனையின்பின் நுவரெலிநகர வீதிகளின்வழியே அலங்கரிக்கப்பட்ட வண்டியிலே நற்கருணைநாதரைச் திருப்பவனியாகக் கொண்டுசென்றனர். இளைப்பாறிய கண்டி மேற்றிராணியாரான மகாவந். றெஞ்ஞோ ஆண்டகையவர்கள் திருப்பவனியில் பங்குபற்றித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். திருப்பவனிசென்ற வீதிகளெல்லாம் அழகிய தோரணங்களினாலும், சிங்காரிப்புகளினாலும், பந்தர்களினாலும், மின்சாரதீபங்களினாலும்கூடி விழாக்கோலமாகக் காட்சியளிக்க, சுமார் 4,000 கத்தோலிக்கமக்கள் அணிசெய்து பக்திப்பரவசத்தராய்க் காட்சியளித்தார்கள். இந்தக்காட்சி வீதிகளில் கூடிநின்ற பிறசமயநண்பர்களைப் பரவசராக்கச்செய்து மௌனமாக்கிவிட்டதென்றே கூறவேண்டும். இதுபோன்ற ஒரு சற்பிரசாதத்திருப்பவனி நுவரெலியிலே அத்துணைச் சிறப்புகளுடன் நடைபெற்றதில்லை எனலாம். திருப்பவனி இரவு 7-30 மணியளவில் முடிவெய்தியது. அத்துடன் மாநாடு நிறைவெய்தியது.

## வவுனியாத் தபால்

வவுனியா விசாரணைப்பங்கைச் சேர்ந்த சேமமடுவிலே கோவில்கொண்டிருக்கும் தொழிலாளரின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பர்திருநாள் வழமைபோல இம்முறையும் சிறப்பாக நடைபெறலாயிற்று.

ஆரம்பஉற்சவங்கள் சித்திரை 24-ந் தேதிமாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்றன. திருநாளுக்கு முதல் நாளாகிய 30-ந்தேதிஇரவு அழகுறச் சிங்காரித்திருந்த பலிபீடத்திலே பங்குக்குரவர் வண. யோண் சிங்கராயர் சுவாமியவர்கள் பாடகர்குழாமின் உதவியோடுவேஸ்பர்பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளினர்.

திருநாளாகிய வைகாசி 1-ந்தேதியன்றுகாலை நிறைவேறியபாடற்பூசையின்போது: "தொழிலாளிகளுக்கு மாதிரிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற வாக்கியத்தைப் பீடிகையாகக்கொண்டு இரத்தினச் சுருக்கமாக அரியதோர்பிரசங்கம் செய்யப்பட்டது.

பூசைமுடிந்ததும் பாடசாலைச் சிறுவர்சிறுமியரும், ஆண்களும், பெண்களும் நிரையேமுன்செல்ல அர்ச். சூசையப்பர் திருச்சுரூபம் அழகிய சரோலையில் வைக்கப்பெற்று, ஒலிபெருக்கிபூட்டிய இரதத்தில் கோயில்சக்கிறிஸ்தாம் செபமாலைசொல்ல, இடையிடையே பாடகர்கள் பாவாலும் மனப்பூவாலும் சூசைதாதாவைத் துதித்துச்செல்ல, ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டுக் கோவிலையடைந்ததும் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே நிறைவாயிற்று.

—நிருபர்.

## செட்டிய சமூகத்தினரின் மருதமடுத் திருயாத்திரை

செட்டியசமூகத்தினர் சென்ற சித்திரைமாதம் 23-ந்திகதி திங்களன்று மருதமடுத் திருசேத்திரத்திற்குத் தங்கள் எட்டாவதுவருடத் திருயாத்திரையை நடத்துமாறு கூடியபோது, கொழும்பு, கோட்டைப் புகையிரத நிலையத்திலே சுமார் 200 யாத்திரிகர்கள் புகையிரதமேறினார்கள். விசாரணைக்குரவராகக் கூடவந்த வண. பிகோ, எஸ். ஜே. சுவாமியவர்கள் யாத்திரிகர்கட்கென்று திரிதின ஆராதனைவழிபாடுகள் நடாத்தினர். ஆடவர்கள், பெண்கள், இளைஞர்கள், பிள்ளைகளுக்கென்று வேறுவேறாக விசேஷகூட்டங்கள் நடைபெற்று அவற்றிலே தகப்பன்மார், தாய்மார், பிள்ளைகளின் கடமைகளும், உத்தரவாதங்களும் விளக்கிக்காட்டப்பட்டன.

26-ந்திகதி வியாழக்கிழமை திருசேத்திர பரிபாலனரால் மாலைஆராதனைபாடி, 27-ந்திகதி வெள்ளிக்கிழமைகாலை 7 மணிக்குப் பாடற்பூசை நிறைவேறியது. ஈற்றில் யாத்திரிகர்கள் "ஆவே மறிஸ் ஸ்ரெல்லா" என்ற பிரஸ்தாபம்பெற்ற மாதாவின் கீதத்தை இன்பகரமாகப் பாடிக்கொண்டு பரிசுத்த லூர்துநாயகியின் திருக்கெபிக்குகடத்திய மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரத்துடனும், அதனைத் தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட சிறிய பிரசங்கத்துடனும், மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு அனைவரையும் நேர்ந்தொப்புக்கொடுக்கும் வைபவத்துடனும் திருசேத்திரத்தில் தங்கியிருந்த நான்கு பாக்கியமான தினங்களும் பூர்த்தியடையலாயின.

யாத்திரையின்போது நடைபெற்ற சகலஆராதனைகளிலும்அதனை ஒழுங்குபடுத்திய திரு. டி. ஜே. எல். ஆனந்தப்பா அவர்களாலும், திரு. ஏ. ஆர். டி. கந்தப்பா அவர்களாலும் விசேஷவிதமாகப் பயிற்றப்பட்ட பெண்பிள்ளைகளையும், ஆடவர்களையும்கொண்ட பாடகர்குழாமினால் செல்வி முத்துராணி கந்தப்பா வாத்தியமீட்ட சங்கீதங்கள் படிக்கப்பட்டன.

---

ஜோ வாக்கர்என்ற அமெரிக்க விமானி 'எக்ஸ்—15'ரொக்கற் விமானம் ஒன்றைப் பூமியிலிருந்து 48மைல் உயரம்வரை செலுத்திச்சென்று மீளவும்பூமிக்குச் சேமமாகத் திரும்பி வந்துள்ளார். இந்தவிமானம் மணி ஒன்றுக்கு 3,443மைல்வேகத்திலே பறந்துசென்றது.

---

### நன்றித்துதி

வயோதிப கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நான் ஒருநாள் தற்செயலாகக் கால்தவறிவிழ நேர்ந்தது. அப்போது யேசுவே என்னை இரட்சியும், அர்ச். சூசையப்பரே என்னைக்கைதூக்கும் என்று சொல்லிக்கொண்டேன். யேசுநாதரின் இரக்கத்தாலும், அர்ச். சூசையப்பரின் வேண்டுதலாலும் எவ்விதஆபத்துமின்றிக் காப்பாற்றப்பட்டேன். நேர்த்திப்படி பிரசுரஞ்செய்கிறேன்.

யாழ்ப்பாணம் பிலுப்பாச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## யாழ்மேயர்பதவி படும்பாடு

அங்கத்தவர்களிடையே தனக்கெனப் போதியஆதரவில்லாத ஒருவரை யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராகச் சந்தர்ப்பம்நோக்கி ஏகமனதாக முடிசூட்டினூர்கள் பதினைந்து நகரபிதாக்கள். முடிசூட்டுவைபவ கொண்டாட்டங்கள் முடிவடையாமுன்னரே படியிறக்கும்வைபவமும் நிகழ்ந்துவிட்டது. பிரான்சிலே நியதியற்ற பிரதமர்களைப்போல யாழ்ப்பாண மாநகரசபையும் ஏற்றுவதும், இறக்குவதுமாகப் மேயர்பதவியை நிலையாத பதவியாக்கி விட்டது. கட்சிகள், தனிப்பட்டவர்கள், கட்சிக்குள்கட்சிகளென்று பல படப்பிரிந்து கருமம்புரிவதும், பின்னர் ஒருங்கமைந்து ஒருவழிப்படுவதும், அப்பால் வழிவிலகி நிலைமையைக் குலைப்பதும் யாழ்ப்பாண மாநகரசபையின் கோலம்போலுமென்ற கருத்துப் படச் சென்ற27-4-62-இல் பிரசுரமான "இந்துசாதன"த்திலே "கணம் பித்தம், கணம்வாதம்" என்ற தலையங்கத்தின்கீழ் ஒருசெய்தி வெளியாயிருக்கிறது.

## திராவிடமுன்னேற்ற கழகமும் தமிழரசுக்கட்சியும்

"தென்னிந்திய திராவிடமுன்னேற்ற கழகத்துடன் தமிழரசுக்கட்சி எவ்விததொடர்பும் கொண்டில்லை" யென்று அக்கட்சிப்பிரமுகரான நல்லூர் எம். பி. டக்றர் ஈ. எம். வி. நாகநாதன்அவர்கள் அறிவித்திருக்கிறூர். "ருஷிய-சீன அரசாங்கங்களிடமும், ஆசியக்கட்சிகளிடமும் நிதி உதவியும், உறவும்கொண்டுள்ள கம்யூனிஸ்த கட்சியைப்போலவோ, மாஷல்ரிற்றோவின் நட்பைவளர்க்கும் சமசமாஜ கட்சியைப்போன்றோ தமிழரசுக்கட்சி உலகிலுள்ள எந்தக் கட்சியுடனுவது தொடர்புகொள்ளவுமில்லை; சம்பந்தம் கொண்டிருக்கவுமில்லை" யென்றும் மேலும்அவர் தெரிவித்திருக்கின்றூர்.

## பஞ்சாயத்து விசாரணை

நல்லூர்தெற்கிலே அக்காலத்தில் போன்று கிராமப் பஞ்சாயத்துஒன்று நடைபெற்றுவருகின்றது. கூடியவரை சிவில்வழக்குகளையும், சிறுகுற்ற கிறிமினல்வழக்குகளையும் அதுவிசாரணை செய்து தீர்த்துவைக்கிறது. நல்லூர் தெற்குச் சனசமூகநிலையம் நிறுவிய இப்பஞ்சாயத்து சென்றசித்திரை 30-ந்திகதியன்று வழக்குஒன்றை விசாரணைசெய்து திருப்திகரமாகத் தீர்ப்பளித்துச் சமரசம்செய்துவைத்தது. இது அமைக்கப்பட்டபின் இதுவரை 36,000ரூபாவுக்குமேல் பெறுமதிசம்பந்தப்பட்ட சிவில்வழக்குகளைத் தீர்த்துவைத்துள்ளதாகத் தெரியவருகிறது. ஏனையசமூக நிலையங்களும் பஞ்சாயத்துகளை அமைத்து, மக்கள் அனுவசியமானவழக்குகளில் ஈடுபடுவதைத்தடுக்க முன்வந்தாலோ!

## பிரதமர் கொலைவழக்கு அப்பீல்

பிறிவிக்கவுன்சிலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பண்டாரநாயக்கா கொலைவழக்குஅப்பீல் மனுவானது விசாரணைக்கு எடுக்கப்படக்கூடிய தினமாக இம்மாதம் 14-ந்திகதி திங்கட்கிழமையாய் இருப்பதாக லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. அன்றுதினமே விசாரணைத்திகதியாய் இருக்கக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாய் அப்பீல்காரருக்காக ஏற்பட்டுள்ள சொலிசிற்றர்களும் தெரிவித்துள்ளார்கள்.

## மட்டக்களப்பு-யாழ்ப்பாண விமானசேவை

நெடுநாள் எதிர்பார்த்திருந்த மட்டக்களப்பு-யாழ்ப்பாண விமான சேவை இம்மாதம்2-ந்திகதி புதன் கிழமை ஆரம்பமாயிற்று. அன்றுகாலை மட்டக்களப்பு இறங்குதுறையில் விமானம்போய் இறங்கியதும் புதிய சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தவிமானம் கொழும்பிலிருந்து காலை6-15மணிக்குப் புறப்பட்டு, 7-15 மணிக்கு அம்பாறையைச் சேர்ந்து, பின்னர் 7-30மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 7-45மணிக்கு மட்டக்களப்பைப் போய்ச்சேரும். அதன்மேல் அங்கிருந்து 8மணிக்குப் புறப்பட்டு 9-20மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேரும். பின்னர் பிற்பகல்1-30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு 2-30மணிக்கு மட்டக்களப்பையும், அதன்மேல் 3-05மணிக்கு அங்கிருந்துபுறப்பட்டு 3-20மணிக்கு அம்பாறையையும், 3-40மணிக்கு அம்பாறையிலிருந்து புறப்பட்டு 4-40மணிக்குக் கொழும்பையும்போய்ச்சேரும். மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானப்பிரயாணசலார் 55ரூபாவாகும்.

## நெடுந்தீவுப் பிரயாணசேவை

சிலகாலமாகப் பழுதடைந்துகிடந்த இராஜேஸ்வரிஎன்ற மோட்டர்படகு திருத்தப்பட்டு, அதனுல் இம்மாதம் 2-ந்திகதிமுதல் ஊர்காவற்றுறைக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே பிரயாணசேவை மீண்டும் நடைபெற்றுவருகிறது. நெடுந்தீவுமக்களின் சங்கம் ஒன்று இந்தமோட்டர்படகைக் குத்தகையெடுத்து நடத்துகின்றது.

## அபேட்சகர் நியமனதினம்

சன்ப்பிரதிநிதிகள்சபையில் காலியாயிருக்கும் மூதூர், வெலிமடை, அநுராதபுரமாகிய முத்தொகுதிகளினதும் ஸ்தானங்களுக்கான உபதேர்தல்களிலே அபேட்சகர்களாக முன்வருகிறவர்கள் தங்கள்நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியதினம் இம்மாதம்22-ந்திகதி செவ்வாய்க்கிழமையாகும். நியமனப்பத்திரங்கள் முறையே திருகோணமலை, பதுளை, அநுராதபுரக் கச்சேரிகளிலே சமர்ப்பிக்கப்படவேண்டியன.

## பிரவேசபரீட்சைப்பேறு

சென்றமார்கழிமாதம் நடைபெற்ற இலங்கைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சைக்குத்தோற்றிய 4,400மாணவர்களில் 686பேர்மாத்திரம் அரங்கேறியிருக்கின்றனரெனச் சென்ற சனிக்கிழமை சர்வகலாசாலை வெளியிட்ட பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து தெரியவருகிறது. அரங்கேறியவர்களில் 361பேர் பெண்கள், 325பேர்ஆண்கள்.

## "சதிகளுக் காரணம்" என்ன?

"கம்யூனிஸ்தகட்சியும், சமசமாச கட்சியும் உண்டுபண்ணிய அனுவசியமான வேலைநிறுத்தங்கள்தான் புரட்சிச்சதிகாரர் அரசாங்கத்தை வீழ்த்துவதற்குச் சதிசெய்யத் தகுந்தசந்தர்ப்பத்தை அளித்தன" என்று கண்டியிலே சென்றசனிக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புதியகாரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசியபோது அக்கட்சியின் கண்டிக்கிளைத் தலைவரும், கண்டிமாநகரசபை அங்கத்தவருமான [illegible] விருக்கிருர்.

## மாநகரசபை நிர்வாகம்

யாழ்ப்பாண மாநகரசபையை உடனடியாகக்கலைத்துவிசேஷகமிஷனரது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்பதிலே யாழ்ப்பாணநகரிலுள்ள முக்கியபிரமுகர்கள்சிலர் ஈடுபட்டுவருவதாகச் செய்திபரந்திருக்கிறது; சிலகாலத்திற்கேனும் மாநகர சபையின் நிர்வாகத்தைத் தொடர்ந்து ஸ்திரமாக இயக்கும்பலம் தற்போதையசபையிலே எந்தக்கோஷ்டிக்கும் இல்லாமையால்-நகரில் எத்தகைய அபிவிருத்திவேலையும் நடைபெற இடமில்லாமையால் சபையைக் கலைத்துவிடவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள்.

## ஆசிரியர் சங்கத்தின் கேள்வி

ஆங்கிலத்தைக் கட்டாயபாடம் ஆக்கும்படியும், சிங்களப்பிள்ளைகளுக்குத் தமிழ்படிக்கவும், தமிழ்ப்பிள்ளைகளுக்குச் சிங்களம்படிக்கவும் வசதியளிக்கும்படியும் அகில - இலங்கை ஆசிரியர்சங்கம் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளது. இன்றைய குழப்பமான சூழ்நிலையில் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பரஸ்பரம் ஒருவர்ஒருவரின் பாஷையைப் படிப்பதைத்தவிர வேறுசிறந்தவழியைக் காணமுடியாதென்றும் சங்கம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## கொழும்பு அதிமேற்றிராணியார்

கொழும்பு அதிமேற்றிராணியாராகிய அருட்பெருந்தகை தோமஸ் கூறே ஆண்டகை வத்திக்கான் பொதுச்சங்க மத்தியஆயத்தகமிஷனின்தொடர்கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு இம்மாதம்1-ந்திகதி செவ்வாய்க்கிழமை இரவு றோமைநகர் செல்லலாயினர். வருகிறஐப்பசிமாதம் 11-ந்திகதியன்று ஆரம்பமாகும் இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கான தங்கள் ஆயத்தபணியைத் தொடர்ந்துஆற்றுமாறு உலகின்பலவேறு பகுதிகளிலுமிருந்து முந்தியசந்தர்ப்பங்களில் போன்று கருதினல்மாரும், அதிமேற்றிராணிமாரும், மற்றும்குருசிரேஷ்டர்களும்சென்று அங்கேஇம்முறையும் ஒன்றுகூடியுள்ளார்கள்.

## புதைக்கப்பட்ட கருவாடு

நாட்டின் பலவிடங்களிலும் கருவாட்டுக்கூச்சல் எழுந்துகொண்டிருக்கும் ஒருசந்தர்ப்பத்திலே போதிய பண்டகசாலை வசதியில்லாததால் 900 அந்தர்கருவாடு அழுகிப்போய் மனித உணவுக்கு உதவாதநிலைமையிலே குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. இந்தக்கருவாடுமுழுவதும் கூட்டுறவு-மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திலேயே அழுகியது. கருவாட்டைச் சேமித்துவைக்கப் போதியபண்டகசாலைகள் அமைக்கப்படும்வரை இத்தகையநஷ்டம்ஏற்படுவது தவிர்க்கமுடியாதகாரியமாம்.

## அரசாங்கம் திரட்டியுகடன்

முன்னெருபோதும் இல்லாத பெருந்தொகையாய் அரசாங்கம் சென்ற1960-61 நிதிவருடத்தில் 26 கோடியே 95இலட்சத்து 33ஆயிரத்து 200ரூபாகடன் திரட்டியுள்ளது. இதற்குமுந்திய நிதிவருடத்திலே அது கடனுகத் திரட்டியபணம் 19கோடியே 50இலட்சம் ரூபாவாகும். இதற்கு முந்திய இருநிதிவருடங்களிலும் அரசாங்கம் கடனுகவாங்கிய பணம் [illegible] 20கோடி ரூபாவும், 9கோடியே 50இலட்சம் ரூபாவுமாகும்.

## உணவு அதிகாரிகள்

பலவிதமான மோசடிகள், ஊழல்கள் சம்பந்தமாக உணவுப்பகுதி உத்தியோகஸ்தர்கள் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாகச் சந்தேகிக்கப்பட்ட மற்றும் 28 பேர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்பற்றிய விசாரணைகள் தற்போது நடைபெறுகின்றன. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களிலே விலைக்கட்டுப்பாடு இன்ஸ்பெக்றர்மார் மூவரும், ஸ்ரோர்கீப்பர்கள் அறுவரும், மற்றும் பலஉத்தியோகஸ்தர்களும் அடங்குவார்கள்.

## மந்திரிகளுக்குக் கட்டுப்பாடு

மூதூர், வெலிமடை, அநுராதபுரமாகிய மூன்றுதொகுதிகளிலும் நடைபெறவிருக்கும் உபதேர்தல்கள் சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரசாரஞ் செய்யத்தக்கதாய் எல்லா மந்திரிகளும் நாட்டில்இருக்கவேண்டுமென்று பிரதமர் அறிவித்திருக்கிறூர். அதனுல் ஜெனிவாநகரில் நிகழவிருக்கும் உலகசுகாதார ஸ்தாபன மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்குசெல்லவிருந்த சுகாதாரமந்திரி தனது வெளிநாட்டுப்பிரயாணத்தை நிறுத்திக்கொண்டாராம். மந்திரிகளைத் தவிர, பாராளுமன்ற காரியதரிசிகளுக்கும், அரசாங்ககட்சி எம். பி. களுக்கும் இந்தத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்குப் போனஸ்

தங்களுக்குள்ள லீவுவசதிகளைப் பயன்படுத்தாது பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்குமுகமாகப் போனஸ்கள் வழங்கப்பட வேண்டுமெனச் சிபாரிசுசெய்யும்விஷயமாய்த் தேசியகல்விக்கமிஷன் தற்போது ஆலோசனை செய்துவருகிறது. இந்தயோசனை ஆசிரியர்களின் பாடசாலைவரவுகள் அதிகம்நலலாயிருக்கச் செய்வதேயாகும். அவர்கள் தங்கள்லீவுநாட்களையெல்லாம் எடுத்துக்கொள்வதானது பாடசாலைகளின் ஒழுங்கீனத்துக்கு வழிபண்ணுவதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்குக்கிடைத்துள்ள லீவுகளையெல்லாம் எடுத்துக்கொண்டால் வருடம் ஒன்றுக்கு ஐந்துமாதமே படிப்பிக்கும் நாட்களாயும், கலியாணம்செய்துள்ள ஆசிரியைகளாயிருந்து பிரசவகால லீவுநாட்களையும் எடுத்துக்கொண்டால் நாலுமாதமே படிப்பிக்கும்நாட்களாயும் இருக்குமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது,

## சிவில்சேவை ஒழியுமா?

"சி. சி. எஸ்." என அறியப்படுகின்ற சிவிலுத்தியோகசேவையை நீக்கிவிட்டு ஒரேமுகமான நிர்வாகசேவையை அமைக்கவேண்டுமென்று நிதிமந்திரிசமர்ப்பித்த பிரேரணையை மந்திரிசபை அங்கீகரித்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்தஒரேமாதிரியான நிர்வாகசேவையை அடுத்தமாத முதல் நடைமுறைக்குக் கொண்டுவருவதென்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இது நடைமுறைக்கு வரும்போது தற்சமையம் சேவையிலுள்ள சிவிலுத்தியோகசேவை அதிகாரிகளை வழமையான சேவைகாலமுறைப்படி மூன்றுமாத முன்னறிவித்தல்கொடுத்து இளைப்பாற அனுமதிப்பதென்று முடிவுசெய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### வைகாசி மாதம் — 1962

| | | | |
|---|---|---|---|
| 13 | ஞா. | **பாஸ்காவின் 3-ம் ஞாயிறு** (வி. ம.) | வெ. |
| 14 | தி. ம | காலதினம் (ஞாயிறு பூசை) அர்ச். பொனிப்பாஸ் | வெ. |
| 15 | செ. | அர்ச். டெலாசால் அருளப்பர் | வெ. |
| 16 | பு. | அர்ச். உபால்தப்பர் | வெ. |
| 17 | வி. | அர்ச். பாஸ்கால் பேயிலன் | வெ. |
| 18 | வெ. | அர்ச். வெனன்சியார் | சி. |
| 19 | ச. | அர்ச். செலஸ்தீர் அருளப்பர் (அர்ச். புடென்சியானு ஞா) | வெ |

சத்திய வேத
பாதுகாவலன்
1962-ம் ஆண்டு
வைகாசிமாதம் 13-ந் திகதி

## தேசிய ஐக்கியம்

மக்கள் நாட்டின்நலனுக்காகத் தேசாபிமானத்துடன் உழைக்க வேண்டும்; அரசியல் குரோதங்களையும், மற்றுமுள்ள வேற்றுமைகளையும் அறவேமறந்து தம்முள்ஒன்றுபட்டு நாட்டின்முன்னேற்றத்திற்காய் உழைக்க முன்வரவேண்டும்; மக்கள் சாதி, மதபேதங்களைமறந்து நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபடவேண்டுமென்று மந்திரிகளும், எம். பி. களும் தென்னிலங்கையிலே மக்கள் கூடுமிடங்களிலெல்லாம் இன்னமுமே உரக்கக்கூறிக்கொண்டு வருகிருர்கள். அங்ஙனமாக, சமீபத்திலே கல்விமந்திரி மலாயாவுக்கும், ஜப்பானுக்கும் விஜயஞ்செய்ததிலிருந்து இருகண்களும் அவருக்குத் திறபட்டு ஞானம்பிறக்கலாயிற்று. அதனுல் சமீபகாலத்திலே அரசாங்கக்கொள்கைகளின் பயனின்மையை ஒருமந்திரியாவது கண்டுணர்ந்தமைபாராட்டத்தக்கதே. ஆகவே, அவர் தான் படித்துவந்த சிலபாடங்களையாவது தனது சகமந்திரிமார்களில் சிலருக்கேனும் கற்றுக்கொடுப்பாரென நம்பலாம்.

கல்விமந்திரி மலாயாவுக்கும், ஜப்பானுக்கும் விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பவும் ஸ்ரீலங்காவில் கால்வைத்ததும் அவர்வாயிலிருந்து மலர்ந்தது என்ன?—அபிவிருத்தியடைந்த பிறநாடுகளுக்குச் சென்றுவிட்டு இலங்கைக்குத் திரும்பிவரும்பொழுது 'கோழிக்கூடு' ஒன்றிற்குள் திரும்பி வருவதுபோன்ற உணர்ச்சிஏற்படுகிறது; எமதுசுதந்திரத்தை நல்ல முறையிலே நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை; நான்குவருடங்களின்முன் சுதந்திரம்பெற்றமலாயா பாராட்டத்தக்க அளவிலே முன்னேறியுள்ளது; ஆனுல், இலங்கை சுதந்திரமடைந்து பதினெருவருடங்களாகியும் முன்னேறவில்லை; இலங்கையிலே ஒவ்வொருவரும் பிரதமராக வேண்டுமென்று விரும்புகிருர்கள்; அவர்கள் பாராளுமன்றத்திலுள்ள தங்கள் ஆசனங்கள்பற்றியும், அதிகாரம்பற்றியுமே சிந்திக்கிருர்கள்; நாம்கைத்தொழில்களை விருத்திசெய்து முன்னேற்றப்பாதையில் வீறுகொண்டுசெல்ல எதையுமே செய்யவில்லையென்று ஒளிப்புமறைப்பில்லாது கல்விமந்திரி உள்ளதை உள்ளவாறு சொல்லியிருப்பது ஒரு பெருமையான செயலே. ஆனுல், அவர் கல்விமந்திரியாயிருந்து தலைமைவகித்திருக்கும் கல்விப்பகுதியே ஒரு "கோழிக்கூடு"என்று சந்தர்ப்பங்கண்டு குறைகூறுவாரும், முறையீடுசெய்ய முன்வருவாரும் இல்லாமலில்லை.

மந்திரிகளுக்கும், பெரும்பான்மையினரான அரசாங்ககட்சிஎம். பி. களுக்கும் கல்விமந்திரி எடுத்துக்கூறியது ஒருநல்ல படிப்பனையாகும். அரசாங்கம் சட்டங்களுக்குமேல் சட்டங்களை இயற்றலாம். திட்டங்களுக்குமேல் திட்டங்களைச் செய்யலாம். ஆனுல், தேசியஒற்றுமையின்றேல்— இந்நாட்டில்வாழும் பெரும்பான்மை, சிறுபான்மைமக்களிடையே ஐக்கியமின்றேல் அவைகளெல்லாம் சாத்தியமாவது அசாத்தியமாகும். சிறுபான்மைமக்களைப் புறக்கணித்து எந்தஅரசாங்கமும் முன்னேறமுடியாது. இது வரலாறுகண்ட உண்மை. அதனுல் எவ்வித தயைதாட்சணியமுமின்றிப் பாஷைப்பிரச்சினையையும், பிரசாவுரிமைப்பிரச்சினையையும் அரசாங்கம் சுமுகமாகத் தீர்த்துவைக்கவேண்டும். அப்போதுதான் நாட்டின்பொருளாதார வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் எதிர்பார்க்கமுடியும். வெறும்பேச்சினுல் இவைகள் சாத்தியமாகப் போவதில்லை.

இலங்கையின் இன்றையநிலைமை பொருளாதார விஷயமாகவோ அன்றேல் சாகிய, சமூக ஐக்கியவிஷயமாகவோ அதிகம்பரிதாபகரமாய் இருக்கின்றது. சிங்களரிடையே அரசியற்கட்சி பேதங்களாலும், கொள்கைவேற்றுமைகளாலும், மதபூசல்களாலும் ஐக்கியம்சிதறுண்டு சின்னபின்னமாகியிருக்கிறது. அவ்வாறே தமிழ், முஸ்லீம் சாகியங்கள்மத்தியிலும் எனலாம். யாவற்றிற்கும்மேலாய் அரசாங்கத்தின் மொழிப்பிரச்சினையானது இருபிரதான பெரும்பான்மைச் சாகியத்தவர்களான சிங்களவர், தமிழர், மத்தியிலே உண்டாக்கியிருக்கும் பிளவுநீங்குகிறவரை இந்நாடு பொருளாதாரவளம் பெறுவதும்; சுபீட்சமடைவதும் இயலாதென்று சிங்களத்தலைவர்களிலே ஒருபாலார் ஒப்புக்கொண்டு, வடக்கு—கிழக்கு மாகாணங்களிலே அரசாங்கநிர்வாகம் தமிழில் நடைபெறச் செய்யவேண்டுமென்றும், தமிழையும், ஆங்கிலத்தையும் சிங்களத்துடன் இணைந்தமொழிகளாகச் செய்து தேசியஐக்கியத்திற்கு வழிபண்ண வேண்டுமென்றும், தமிழரின் ஒற்றுமையை விரும்பினுல் சிங்களவர் தங்கள் சிங்களம்மட்டும் கொள்கையை வற்புறுத்தக்கூடாது; தமிழரின்ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஒரேயொருவழி சிங்களத்துடன்தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுப்பதாகுமென்று ஆலோசனை கூறுகின்றனர். ஆனுல், அரசாங்கமோ இந்த ஆலோசனைகளிலே சிந்தனையைச் செலுத்தாது ஒன்றின்மேல் ஒன்ருக — புதிது புதிதாக எழுந்துகொண்டிருக்கும் பிரச்சினைகள்மட்டிலும், புதிய புதிய சட்டங்களை இயற்றுவதிலுமே கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றது. அதனுல் தேசிய ஒற்றுமை என்பதும், சாகிய — சமூக ஐக்கியமென்பதும் இலகுவில் ஏற்படாது, இலவுகாத்த கிளியின்பாடாகவே முடியும்என்க.

> மனச்சஞ்சலத்திற்கு இடங்கொடாதே. ஏனெனில், மன அமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனேடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும், நீ தேவ ஊழியத்தில் குளிர்ந்தவனுய் அசமந்தமுள்ளவனுயிருப்பாய்.

## சிந்தனைக் கதிர் —12

எதிர்பாராதவிதமாக மோட்டார் லொறியொன்று விபத்தில்சிக்கிக்கொண்டது. அதன் சாரதி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குள் வாகனம் பாதையின் பக்கமாகப் பெருமதிர்ச்சியுடன் சரிந்தது. சாரதி சிறியுதூரத்துக்கப்பால் வீசப்பட்டான். ஆயினும் அவனுக்குப்பலமான காயங்களெதுவுமில்லை.

விழுந்த அதிர்ச்சி நீங்கியதும் சாரதி தனது வாகனத்தை நோக்கியோடினுன். தனது பக்கத்திலமர்ந்திருந்த சிறுவனுக்கு என்ன நேர்ந்ததென்பதை அறியமுனைந்தான். சாரதியின் பாலகனே புரண்டுகிடந்த வாகனத்தின் கீழேநசுங்கிக்கொண்டிருந்தான். ஆவேசங்கொண்ட அந்தமனிதன் தனதுமுழுப்பெலத்தையும் உபயோகித்து வாகனத்தைஉயர்த்த முயற்சித்தான், சிறிது கிளம்பியதும் தனது முதுகினுல் மோட்டார்லொறியை மேலும் உயர்த்திக்கொண்டு கரங்களால் புதல்வனை இழுத்தெடுத்தான்.

தூரத்தில் கட்டிட வேலைசெய்துகொண்டிருந்தோர் உதவிக்காக ஓடிவந்தனர். அண்மையிலிருந்த மருத்துவர் ஒருவரும் ஸ்தலத்துக்கு விரைந்தார். சிறிது நேர சிகிச்சையின்பின்னர் பையன் சுயநினைவுடன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டான். அவனது உயிருக்கு நேர்ந்த அபாயம் நீங்கிவிட்டது. கூடியிருந்தோர் மோட்டார் வாகனத்தைப்புரட்ட எண்ணினர். அதை மீண்டும் புரட்டிச் சமநிலைக்குக் கொண்டுவருவதற்கு ஆறுமனிதர்களின் உதவி தேவைப்பட்டது.

ஆறுமனிதர்களால் பெருங்கஷ்டத்துடன் புரட்டப்பட்ட வாகனத்தை அச்சாரதி தனியே எவ்விதம் உயர்த்தினுன்? அவ்வித சாதனையைச் செய்வதற்கு அவனுக்கு எங்கிருந்து சக்தி கிடைத்தது? புதல்வனில் அவன் கொண்டிருந்த அன்பே அத்தகைய பெருஞ்செயலைச் செய்வதற்கு அவனுக்குச் சக்தியையளித்தது.

அன்பு பலமுள்ளது. வல்லமையுள்ளது. சக்தியுள்ளது. பாடுகளின் கனத்தால் நொந்துவருந்திய கிறிஸ்துநாதர் சிலுவையைச் சுமக்கமாட்டாமல் பலமுறை குப்புறவிழுந்தார். ஆயினும் மீண்டும் மீண்டும் சிலுவையைச்சுமந்து கல்வாரி உச்சிக்குச் செல்வதற்கு அவரைத் தூண்டிய சக்தியாது? மனுக்குலத்தின் மேல் அவர் கொண்டிருந்த மகத்தான அன்பே காரணமாகும்.

நாமும் எங்களுக்காகப் பாடுபட்ட கிறீஸ்துநாதரில் அன்புகொள்வோம், எங்கள் அன்பு தெய்வீக அன்பாக விளங்கட்டும். அது நல்லவர்களாக நாம் வாழ்வதற்கு எமக்கு மகத்தான சக்தியையளிக்கும்.

**தேவனே உம்மை நேசிப்பதற்கு எமக்கு உமதருளைத் தந்தருளும்.**

—சா. பெ.

# பேசும் பேனு

### பத்திரிசிய இயக்கம்

பத்திரிசிய இயக்கமென்ருலென்ன? அதை நடாத்துவதெப்படி? சாதாரண பொதுக்கூட்டங்களுக்கும் இவ்வியக்கத்துக்குமுள்ள வேறுபாடுகள் எவை? என்றெலலாம சில நண்பர்கள் கேள்விகளைத் தொடுத்துள்ளனர். பத்திரிசிய இயக்கம்பற்றி அன்பர்களின் சந்தேகங்களைத் தீர்க்குமுகமாகச் சில விளக்கங்கள் இங்கு தரப்படுகின்றன.

ரோமையில் அக்காலத்தில் பத்திரிசியர்கள் எனப்பெயரிய ஒரு குழுவினர் வசித்தனர். மக்களிடையே இவர்கட்குச் செல்வாக்கு அதிகம். இவர்கள் தங்களின் நேர்மை, பண்பு என்னும் குணங்கட்காகவே பெரிதும்மதிக்கப்பட்டனர். இவர்கள் தனிப்பட்டஎவருக்கும் செல்வாக்கு அளிக்காது எக்கருமங்களையும் கலந்துரையாடியே நல்லமுடிவுகளைத் தெரிந்துகொள்வர். கத்தோலிக்க கல்விசம்பந்தமான கலந்துரையாடலுக்கும் இப்பத்திரிசியர்களின் பெயர் அளிக்கப்பட்டதின் காரணம், கௌரவமாகக் கலந்துபேசித் தங்கள் தப்பபிப்பிராயங்களைப் போக்குவதற்காகவே.

பத்திரிசிய இயக்கத்தை நடாத்தும்போது நேரத்துக்கு மதிப்புக்கொடுத்தல் வேண்டும். இஸ்பிரீத்துசாந்துவின் செபத்துடன் இயக்ககூட்டம் ஆரம்பமாகும். முதலில் ஒரு இல்லறப்பேச்ளாளர் குறிப்பிட்ட பொருள்பற்றிப் பத்துநிமிடங்கள் பேசுவார். எக்காரணத்துக்காகவும் இச்சொற்பொழிவு பத்துநிமிடங்கட்குக் கூடுதல் ஆகாது. எடுத்துக்கொண்ட பொருள் சம்பந்தமான முக்கிய அம்சங்களையும், கொள்கைகளையும் எடுத்துக்கூறுதல்போதும். பின்னர் கலந்துரையாடல் நடைபெறும். குறிப்பிட்ட பொருள் சம்பந்தமாகத் தமது சந்தேகங்கள், தப்பபிப்பிராயங்கள், கொள்கைகளைப் பற்றியெல்லாம் சபையிலிருந்து வினக்கள் எழுப்பப்படும். பேச்சாளரோ அல்லது அங்கு சமுகமளித்திருக்கும் குருவரோ இவ்வினக்கட்குத் தகுந்தவிடையளிப்பர். தகுந்த விடையளிக்கக் கூடியவர்கள் யாராவது சபையிலிருந்தால் அவர்கட்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படலாம். இக்கலந்துரையாடல் 40 நிமிடங்கட்குமேல் நீடித்தல்கூடாது. பின்னர் ஐந்து நிமிடங்கள் ஓய்வுதரப்படும். இந்நேரத்தில் சமுகமளித்துள்ள பேச்சாளர், குரவர் என்போரைச் சபையோருக்குத் தனித்தனியாக அறிமுகம்செய்து வைக்கலாம்.

இடைவேளையின் பின்னர் தரிசகரானகுரவர் சுமார் 20 நிமிடங்கட்கு அன்றைய பேச்சுகள், வினக்கட்கான விடைகள் சகலவற்றையும் திரட்டித் தொகுப்புரைபொன்று கூறுவார். தொடர்ந்து கட்டளைக்குரவர் இறுதியுரை நிகழ்த்திய பின்னர் விசுவாசமந்திரம் செபிக்கப்படும். கட்டளைக்குரவரது ஆசியுடன் பத்திரிசிய இயக்ககூட்டம் முடிவடையும். மாதமொருமுறை இக்கூட்டம் நிகழ்த்தப்படலாம். ஒவ்வொரு முறைக்கும் பேச்சாளரையும், தரிசககுரவரையும் மாற்றிக்கொள்ளுதல் கூட்டத்தை உற்சாகமாகக் கொண்டுநடாத்த உதவியாகும். 90 நிமிடங்கட்குள் கூட்ட நிகழ்ச்சிகள் நடைபெறப் பார்த்துக்கொள்ளுதல் மிக முக்கியமானது.

### நகைச்சுவை

துடுக்குத்தனம் நிரம்பிய சிறுமியொருத்திக்கு அவளது ஆசிரியையான கன்னியாஸ்திரி படுக்கைக்குச் செல்வதற்குமுன்பு தன்னை நல்லவளாக்கும்படி சின்னயேசுவைப் பிரார்த்திக்குமாறு குறிப்பிட்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமக் கிரிகைகளால் இரட்சணியபாதையை...

பிரான்ஸ்தேசத்தில் றேயேஎனும்நகரில் போண்ஸெற் எனப்பெயரிய ஒரு சீமாட்டி வசித்திருந்தாள். அவள் ஏழைகள்மட்டிலே அணைகடந்தபட்சம் காண்பித்துவந்தாள். அவர்களுக்கென்று அவள் தனதுமனையிலே ஒரு தனிஅறையும் ஒழுங்குபடுத்தியிருந்தாள். ஆண்களும், பெண்களுமாக அந்நகரிலுள்ள சகலஏழைகளும் ஒன்றுவிட்டொருவாரம் அங்குசென்று கிழிந்து அழுக்கடைந்த தங்கள்உடைகளைக் களைந்துவிட்டுத் தங்களால்அங்கே விடப்பட்டுச் சுத்தஞ்செய்து தைத்து வைத்திருக்கும் உடைகளை அணிந்து செல்வார்கள்.

போண்ஸெற்சீமாட்டி அவர்களால் களைந்துவிடப்பட்ட அழுக்குத்துணிகளைத் தானேசுத்தஞ்செய்து, கிழிந்தவைகளைத் தன்கையாலேயே தைத்து அவற்றைவிட்டுப்போன ஏழைகள் திரும்பவருமட்டும் காத்திருப்பாள். இந்தஉத்தமபணியை அவ்வள் ஒருநாள், இரண்டுநாள்அல்ல, வருடமுழுவதும் செய்துவருவது அவளுடைய வழக்கமாயிருந்தது. அதனைச்செய்யப் பகலிலும், இரவிலும் அவள் பலமணிநேரங்களைச் செலவிட்டுவந்தாள்.

அதனால் இந்த அம்மையாருக்கு அண்டைஅயல் வீட்டாருடன் உல்லாசமாகப்பேசிப் பொழுதுபோக்கிக் கொண்டிருக்க நேரம்கிடைக்கவில்லை. அவர்களும் போண்ஸெற்அம்மாள் ஓய்வானநேரங்களிலே தங்களிடம் வருவதில்லை; பேசிப்பறைந்து தங்களுடன் பொழுதுபோக்குவதில்லையென்று இடையிடையே முறையீடுசெய்வதுண்டு. "ஏழைகளை அவர்கள்பாட்டிலே சும்மாவிட்டுவிடு; அவர்களால் உனதுஇல்லத்தைக் கிருமிகளாலும், அழுக்குகளாலும் நிரப்புவதோடு மற்றவர்களுடன் சகவாசம்அற்றவளாகிறாய்; இவ்வாறெல்லாம் உனதுநேரத்தை இன்பமற்ற இந்தஏழைகளுடன் வீணாகச் செலவிடுகிறாயே" என்பார்கள். அம்மையாரோ அவர்களின் ஏளனவார்த்தைகளுக்குச் செவிசாயாது தனதுவேலையை என்றும்போல இனிதே நடத்திவந்தாள்.

நல்லவர்களும், பொல்லாதவர்களும் ஒருநாள் மரணமடைவது சகசமே. போண்ஸெற் அம்மாளுக்கும் அந்தியகாலம்வந்தது. அவ்வேளையும் சர்வேசுரன் தம்மிடம் அழைத்துக்கொள்ளச் சித்தமானார். அவள் மரணமடைந்த செய்தியை அறியவந்ததும் அந்நகர் ஏழைகளெல்லாம் தீராக்கவலை கொண்டார்கள். பிரேத அடக்கத்தின்போது தங்கள் பேருபகாரியை அவர்கள் எவ்விதம் நேசித்திருந்தார்கள்என்பது அவர்கள் உள்ளம் கசிந்துருகி ஆறாய்க்கண்ணீர் உகுத்ததிலிருந்து துலாம்பரமாயிற்று. கவலையேவடிவாய் அங்கு காட்சியளித்துநின்ற இந்தஏழைகள் பிரேத ஊர்வலத்தின்போது கணணீரும், கம்பலையுமாக அணிவகுத்துச்சென்றகாட்சிஎவர் மனதையும் உருக்கவல்ல பிரலாப காட்சியாயிருந்தது.

போண்ஸெற் அம்மாளுக்கு ஒருமகள் இருந்தாள். அவள்ஒருநாள் தன்பாட்டியோடு கோவிலுக்குச்சென்று வீட்டுக்குத் திரும்பிவந்தபோது தன்னுடைய தாயின்அறையிலே ஒருபிரகாசம் தோன்றியதாகவும், அதைச்சுற்றித் தன்னுடையதாய் போய்க்கொண்டிருக்கக் கண்டதாகவும் சொன்னாள். பாட்டியும் அந்தப்பிரகாசத்தைப் பார்த்தாள். ஆனால், அவள் தனதுமகளைக் கண்டுகொள்ளவில்லை. அதனால் ஒருவேளை தனதுமகள் உத்தரிக்கிறஸ்தலத்தில் இருப்பாளோவென்று சந்தேகித்தவளாய் அதை நிவிர்த்திசெய்யுமாறு அக்காலத்திலே பெரியஅர்ச்சியசிட்டவராய் விளங்கிக் கூரேதார்ஸ்என அறியப்பட்டிருந்த வண. வியான்னி அருளப்ப சுவாமியாரிடம் போவதெனத் தீர்மானித்து மறுதினமே அங்குசென்றாள். அவள் இதற்குமுன் அவரைக் கண்டதுமில்லை. அவருடன் சம்பாஷித்ததுமில்லை. அவள் ஆர்ஸ் நகர்போய்ச் சேர்ந்ததும் அவரைச்சந்திக்க அதிக நேரம் காத்திருக்கவில்லை. தான் பேசவந்தகாரியம் இன்னதென்று சொல்வதற்குமுன்னமே சுவாமியார் பாட்டியைநோக்கி, "நீங்கள் உங்கள் மகளைப்பற்றி விசாரிக்க வந்திருக்கிறீர்கள் அல்லவா? அவளுடைய தருமக்கிருத்தியங்கள் அவள் மரித்தவுடனேயே அவளுக்கு மோட்சம் அடைந்துகொடுத்தன; அவளைப்போலவே நீங்களும் உங்கள் இரட்சணியபாதையைத் தருமக்கிரிகைகளால் கண்டடையுங்கள்" எனக்கூறிப் பாட்டியை வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

எம். எம்.

## தாயே என்குறை தவிர்ப்பாய்

பாவக் குளத்தில் அமிழ்ந்திவிட்டேன் — அந்தோ!
பாழும் உயிர்ஊச லாடுகுதே
சாவைத் தடுத்திட வந்திடுவாய்! — அம்மா!
சாந்தி பெறவழி தந்திடுவாய்!

●

ஈனப்பணவெறி லோபியைப் போல் — நானும்
ஈகையின்றிப் பணம் சேர்த்துவிட்டேன்
ஞானத் திருவழி காட்டிடுவாய்! — தாயே!
நம்பினேர் தஞ்சமே காட்டிடுவாய்!

●

கண்ணைக்கட்டி இருட் கூட்டத்திலே — ஒளி
காணத் தவிக்கிறேன் பேதமையால்
எண்ணற்ற பாவப் பழிசுமந்தேன் — பூவில்
ஏங்குகிறேன் தாயே தாங்கிடுவாய்

●

ஈசனைப்பெற்ற பொற் கன்னிகையே — யாரும்
ஈடிணை அற்றநற் கற்புநுவே!
நீசன் எனக்குநீ அன்றியொரு — நல்ல
நேசம் நிறைந்தவர் இல்லையம்மா!

●

தாயே நீஉந்தன் அருள்மடியில் — எனைத்
தாங்கி அணைத்திட மாட்டாயோ?
சேயின் அழுகுரல் கேட்கலையோ? — அம்மா!
செல்வத் திருமுகம் காட்டாயோ?

●

கொஞ்சும் குழந்தைதான் மேனியிலே — அள்ளிக்
குப்பையைக் கொட்டிடில் தாய்துடைப்பாள்
நெஞ்சம் துடித்துநான் வேண்டுகின்றேன் — தாயே!
நின்மகன் என்குறை நீக்காயோ?

— சாந்தினி

## கரும்புச்செய்கையும் சீனியும்

கல்லோயாச் சபையைச்சேர்ந்த கரும்புத்தோட்டங்களிலிருந்து இவ்வருடத்திலே சுமார் ஐம்பத்தையாயிரம்தொன் கரும்பு அறுவடைசெய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறுவடை வருகிற ஆனிமாதமுதல் புரட்டாசிவரை நீடிக்குமாம். 1960-ம் ஆண்டு இலங்கை ஆரம்பித்த அம்பாறையிலுள்ள கல்லோயாச் சீனிஆலை சென்ற 1961-ம் ஆண்டின் முடிவுவரை 2,472 தொன்சீனி உற்பத்திசெய்திருக்கிறது.

## கொப்பறாவின்விலை

பிறநாடுகளிலே இலங்கைக் கொப்பறா, தேங்காய்த் துருவல், தேங்காயெண்ணெய் ஆகியவற்றிற்குக் கடந்த சிலவாரங்களாக இருந்துவந்த கிராக்கி சென்றவாரமுதல் குறைந்து அதினால் விலையும் குறைந்துள்ளது. சென்றவாரம் தேயிலையின் விலையும் குறைந்துள்ளது. ஒருதொன் 910 ரூபாவாக விலைப்பட்ட தேங்காயெண்ணெயின் விலை 49 ரூபாவால் குறைந்துபோயிருக்கிறது.

## பணியாளரின் யூபிலிவிழா

கொழும்பு சஞ்சூசையப்பர்கல்லூரியின் முதுபெரும் கிழவனரான திரு. யோசெவ் பெரேறா என்பவர் அக்கல்லூரியிலே ஐம்பது வருடகாலம் விசுவாசமும், பிரமாணிக்கமுமான சேவை செய்துமுடித்துப் பொன்யூபிலிவிழா கொண்டாடியிருக்கிறார். வசீகரமும், புன்னகைதவழ்வதுமான வதனத்துடன் காட்சியளிக்கும் இவரது பொன்யூபிலிவிழா தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் திருநாளில்வந்ததும் ஒருபெரும் அதிர்ஷ்டமாகும். இவரைக் கௌரவிக்குமுகமாகக் கல்லூரி அதிபர்சுவாமியார் அன்றுதினம் ஒரு பாடற்பூசை நிறைவேற்றினர். திரு. யோசெவ் பெரேறா சேவைப்பற்றும், அமைதியுமான ஒரு கிறிஸ்தவ தொழிலாளியாய், எவர்க்கும் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாய் இருந்துவருகிறார். சஞ்சூசையப்பர் கல்லூரியின் இரண்டாவது அதிபரான வண. சாள்ஸ் ஹென்றி லிற்றன் சுவாமியாரால் 1912-ம் ஆண்டு 18-ம் வயதிலே அமர்த்தப்பட்டு, அதுமுதல் அவரைத்தொடர்ந்துவந்த வண. நிக்கொலா, லெக்கொக், பிள்ளை, டொன் பீற்றர் எனும் நான்கு அதிபர்களின் கீழ் சிறப்பாகப்பணியாற்றி எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றுவந்துள்ள பணியாளரான இந்த யூபிலிவிழாநாயகர் வாழ்க.

சிறுமி படுக்கைக்குப் போவதற்கு முன்பாகப் பின்வருமாறு பிரார்த்தித்தாள்:—சின்னயேசுவே என்னை நல்ல பிள்ளையாக்கும். ஆயின் நீர் வேறு அலுவல்களில் ஈடுபட்டிருந்தால் கொஞ்சநாளைக்கு இப்போதிருப்பது போல் நடக்கும்படிவிடும்.

### விசாரணைக் கந்தோர்

லண்டனிலுள்ள கைட்பாக் என்னுமிடத்தில் மிகப்பிரமாண்டமான கட்டடம்ஒன்றை எழுப்புகிறார்கள். இக்கட்டடம் என்னதேவைக்காக எழுப்பப்படுகிறது? தேவையான கற்கள் எத்தனை? சீமேந்துப்பைகள் எவ்வளவு? நிர்மாணர்கள் யார்? என்றெல்லாம் தினசரி வினவுவோரின் தொல்லைகள் அதிகரித்துவிட்டபடியால் கட்டடநிர்மாணிகள் வினாக்கட்கெல்லாம் பதிலளிக்கும் ஒரு எந்திரத்தைத் தயாரித்துள்ளார்கள்.

இந்த எந்திரத்தில் தொலைபேசியில் உள்ளதுபோன்ற சக்கரமொன்றுண்டு. பக்கத்தில் கட்டடம் சம்பந்தமான வினாக்கள் வரிசையாகக் குறிக்கப்பட்டுள்ளன. எமக்கு எந்தவிடை தேவையோ அதற்குரிய இலக்கத்தைச் சுழற்றினால் அங்குள்ள சிறு ஒலிபரப்பியொன்று அதற்கான விடையை ஒலிபரப்புகிறது.

● அமெரிக்கா சென்றசித்திரை 26-ந்திகதியன்று மீண்டும்ஆகாயத்தில் தொடக்கிய பசிபிக்அணுஆயுதப் பரிசோதனையைத் தொடர்ந்து சென்ற 4-ந்திகதி வெள்ளிக்கிழமை தனது நாலாவது அணுப் பரிசோதனையை நடத்தலாயிற்று. அன்றுவெடிக்கப்பட்டது நடுத்தரஅளவுடைய ஒரு அணுக்குண்டாகும்.

● சீனாவின் கடைசிச் சக்கிரவர்த்தியான ஹென்றி பியுபி சென்றமே தினமன்று ஹாங்சோநகரைச்சேர்ந்த 40வயதுடைய லீ சுலோயென என்ற தாதியைக் கலியாணஞ் செய்துகொண்டாரென ஹொங்கொங்கிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இவர் தற்போது பீக்கிங்நகருக்குச் சமீபமாக ஓர்தோட்டக்காரனாக வேலைசெய்துவருகின்றாராம்.

● இங்கிலாந்திலே ஹற்பீல்ட்நகரைச்சேர்ந்த திரு. சி. விம்பென்னி என்பவர் சரித்திரத்தில் முதன்முறையாகச் சென்றவெள்ளிக்கிழமை தனது சுயசக்திகொண்டு இயக்கப்படும் 'பவ்ளின'என்ற சைக்கிள் ஒன்றிலே ஐந்துஅடிஉயரத்தில் மணிஒன்றுக்குப் பத்தொன்பதரைமைல் வேகத்திலே 993 [illegible] 50பவுண் [illegible]

● மண்ணெண்ணெய் விளக்கைக் கொண்டு மலிவானமின்சாரம் உற்பத்திசெய்யும் கருவிஒன்றை அமெரிக்க "மினசோட்டா மைனிங்கம்பெனி" கண்டுபிடித்துச் செய்துள்ளது. இதிலே அரைப்போத்தல் மண்ணெண்ணெய் ஊற்றினால் 24மணித்தியாலம் மின்சாரம்கிடைக்கும். அவசரத்துக்கு இருமெழுகுவர்த்திகள் போதுமாம்.

● உலகமுழுவதிலும் சுமார்நான்கு கோடி கம்யூனிஸ்தர்கள் உள்ளனரென்றும், இவர்களில் 3கோடியே 60இலட்சம்பேர் கம்யூனிஸ்தநாடுகளிலே இருந்துவருகிறார்களென்றும் அமெரிக்கஅரசாங்கம்விடுத்த அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. சோவியற் ரூஷியாவுக்கு அடுத்தபடியாக இந்தோனேசியாவில்தான் அதிகமானகம்யூனிஸ்தர்கள் இருக்கின்றனராம்.

● அமெரிக்கா சென்றசித்திரை மாதம் 26-ந்திகதியன்று மீண்டும் ஆகாயத்திலே அணுஆயுதப்பரிசோதனை நடத்தத்தொடங்கிப் பத்துஇலட்சம்தொன் வெடிமருந்துச் சக்தியுள்ள ஓர்அணுக்குண்டை ஆகாயத்தில்வீசியது. ரூஷியா இந்தச்சோதனை விஷயமாய் ஓர்உடன்பாட்டுக்கு வராதெனக்கண்டு [illegible] அமெரிக்கா இந்தச் சோதனையில் இறங்கியதாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி தங்கையரே!

வைகாசிமாதம் பூக்களின் மாதம். வசந்தகாலம் என்றும் இதை அழைப்பர். இந்த மாதம் மாதாவின் மாதம் — மாதாவின் வணக்கமாதம். அன்புக்குரசியான நம்தேவதாயை வாயார வாழ்த்துவோம். பூக்களால் தேவதாயாரின் படத்தையோ, சுரூபத்தையோ அலங்கரிப்போம். மல்லிகை, முல்லை போன்ற அழகிய மலர்களை மாலைகளாகக் கட்டி மாதாவுக்குச் சூடுவோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக ரோசாமலர்கள் போன்ற பிரியதத்த மந்திரங்களைப் பத்தியாகச் சொல்லி தேவதாயாருக்குச் சூடுவோம். தேவதாயார் அனுசரித்த தாழ்மை, பொறுமை, பிறர்சிநேகம், கற்பு முதலிய புண்ணியங்களை நாமும் அனுசரிக்க முயலுவோமாக.

அன்புள்ள அண்ணு.

—*—

# மோட்சத்திற்குப் பயணச்சீட்டு

அன்றையத்தினம் யேசுதாசன் சுவாமியார் மிகவும் களைப்பாகக் காணப்பட்டார். ஏனெனில், அவர் காலையில் திவ்வியபூசைநிறைவேற்றி, பாவசங்கீர்த்தனம் கேட்டு, அதன் பின் தமது மீசாமைச் சேர்ந்தவர்களில் வியாதிக்காரரைச் சந்தித்து, சுற்றில் தமது நிகழ்ச்சி நிரலின் கடைசி நிகழ்ச்சியாக ஓர் சாவீட்டிலே கடைசிச் சடங்குகளை நிறைவேற்றிவிட்டு அப்பொழுதுதான் கோவில் திரும்பியிருந்தார்.

அவர் தமது சாய்வுநாற்காலியில் இருந்து இளைப்பாறிக்கொண்டிருந்த பொழுது திடீரென தொலைபேசியின் மணி ஒலித்தது. 'ரிசீவ'ரைக் கையிலெடுத்த சுவாமியார் அடுத்த முனையிலிருந்து தம்மிடம் சலுகை பெறவிரும்புபவர் யாராலும் அவரது வேண்டுகோளுக்கு இணங்குவதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டார்.

ஆனல், அந்த அழைப்போ அவர் எண்ணத்தை மாற்றிவிட்டது. அவ் அழைப்பு சமீபத்திலிருந்த ஆஸ்பத்திரிப் பிரதம வைத்தியரிடம்இருந்து வந்துகொண்டிருந்தது. ஒரு மனிதன் மோட்டார் விபத்தொன்றிலே சிக்கி மிகவும் கடுமையாகக் காயமடைந்திருக்கிறன் என்றும், அவன் இன்னும் சிலமணி நேரத்தில் இறந்துவிடுவானென்றும், அவனிடம் செபமாலை இருப்பதினல் அவன் ஒரு கத்தோலிக்கன் என்று தான் எண்ணுவதாகவும் கூறி, "குருவே! நீங்கள் இப்போது இங்கு வரமுடியுமா?" என்று கேட்டார். அதற்குக் குருவானவர், தாமதமின்றி அங்கே வருவதாகக் கூறினர்.

அடுத்த அரைமணி நேரத்தில் குருவானவர் ஆஸ்பத்திரியை அடைந்தார். அங்கே அவர் வரவை எதிர்பார்த்திருந்த வைத்தியர் அவரைச் சத்திரசிகிச்சை செய்யும் மேசையின் மேல் வளர்த்திஇருந்த மனிதனிடம் அழைத்துச்சென்றர்.

குருவானவரால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாமலிருந்தது. ஏனெனில், அந்த மனிதனின் மண்டையோடு நசித்துப் பிளக்கப்பட்டு அதன்வழியே இரத்தம் வடிந்து கோரக்காட்சி தந்துகொண்டிருந்தது. இதுமட்டுமல்லாது அவனது உடம்பின் பல்வேறு பாகங்களில் ஏற்பட்டுள்ள காயங்களிலிருந்தும் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அதேவேளையிலே வேறிருவைத்தியர்கள் அவனது உயிரைக் காப்பாற்றுவதற்காக அவன் உடம்பிலிருந்து வெளியேறும் இரத்தத்தைத் தடுத்து இயமனுடன் போராடிக் கொண்டிருந்தனர்.

அப்போது பிரதமவைத்தியர் அம்மனிதனிடம் இருந்து எடுத்த பொருட்களான பணப்பை, கைக்குட்டை, செபமாலை என்பனவற்றைச் சுவாமியாரிடம் ஒப்படைத்தார். அவைகளைப் பெற்ற குருவானவர் செபமாலையை எடுத்து அவதானித்துப் பார்த்தபோது அது தேய்ந்துபோயிருந்ததைக் கண்டார். இதிலிருந்து அச்செபமாலை நீண்டகாலமாக அடிக்கடி பாவிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதை அறிந்துகொண்டார்.

அவனை யாரென்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாதிருந்தபோதிலும் அவனிடம் இருந்த செபமாலையிலிருந்து அவன் ஓர் கத்தோலிக்கன் என்று அறியக்கூடியதாக இருந்தது. அவன் கத்தோலிக்கன் என்று நிச்சயம் செய்வதற்குச் செபமாலையைத்தவிர வேறொரு பொருளோ அன்றி அடையாளமோ இருக்கவில்லை. ஆனாலும் அவனிடம் செபமாலை கைவசம் இருந்தமை குருவானவரை அந்தக்காயம்பட்ட மனிதனுக்கு அவஸ்தைப்பூசுதல் அளிக்கத் தூண்டியது. எனவே குருவானவர் சிறிதும் தாமதிக்காது வைத்தியர்கள் [illegible] காப்பாற்ற முய[illegible] கொண்டிருந்த அதேநேரத்திலே தானும் அவனுக்குத் திருச்சபையின் கடைசித் தேவதிரவிய அனுமானமான அவஸ்தைப்பூசுதலை அளித்துக் கொண்டிருந்தார். மரணநேரத்திலே இஷ்டப்பிரசாத நிலையிலுள்ள ஒரு கத்தோலிக்கனுக்கு, பரிபூரண பலன் அளிக்கும் அப்போஸ்தலிக்க ஆசிர்வாதத்தைக் குருவானவர் அவனுக்கு அளித்து கொண்டிருந்தபோது அம்மனிதன் சிறிது அசைந்து மயக்கம் நீங்கி மீண்டும் தன்னுணர்வு பெற்றன். உடனே குருவானவர் கீழே அவனது முகத்தருகிலே குனிந்து "நீர் ஓர் கத்தோலிக்கரா" என வினவினர். அப்போது அந்த மனிதன் தனது உதடுகளை அசைத்து எவருக்குமே கேட்க இயலாத விதமாக மிகவும் மெதுவாக "ஆம்" என்று கூறினன்.

அவன் தனது மூளையின் இரத்தக் குழாய்கள் வழியே இரத்தம் வெளியேறுவதனல் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தான். அதனல், அவனுக்குப் பாவசங்கீர்த்தனம் பண்ண முடியவில்லை. அவன் வைத்தியர்கள் பக்கம் திரும்பி அவர்களைச் சில நிமிடங்கட்கு விலகி நிற்குமாறு வேண்டினன். அந்த மனிதன் சரியாக இஷ்டப்பிரசாத நிலையிலிருக்கிறன என்பதை உறுதிப்படுத்தக் குருவானவர், மேலும் இரண்டு கேள்விகளைக் கேட்டார். பின்னர், குருவானவர் அவனது செபமாலையைத் தூக்கிப் பிடித்தார். அப்போது, அவனதுமுகத்திலே தான் நெடுங்காலம் உபயோகித்த செபமாலையை அடையாளம் கண்டதன் காரணமாக ஒருவினடிப் பொழுதிலே புன்னகை தோன்றி மறைந்தது. பின்னர், குருவானவர் அச்செபமாலையின் குருசை அந்த மனிதனின் உதடுகளுடன் அழுத்திச் செபமாலை மணிகளை அவனது விரல்களுக்கிடையில் சுற்றிவைத்தார்.

மூன்று நிமிடங்கள் கழிந்ததும் அந்த மனிதன் இறந்துவிட்டதாகப் பிரதம வைத்தியர் அறிவித்தார். அப்போது குருவானவர் ஆறுதலான பெருமூச்சு விட்டுப் பின் பிரதம வைத்தியருக்கு நன்றி தெரிவித்து ஆஸ்பத்திரியை விட்டகன்றர். ஒரு மனிதன் உன்னத கடவுளின் நித்தியபேரின்ப இராச்சியத்தை அடைவதை அவர் கண்டுவிட்டார். ஏனெனில், அவனிடம் இரட்சணியத்தின் பயணச்சீட்டு— மோட்சத்தை அடைவதற்கான பயணச்சீட்டு— ஆம்! அதுதான் தேவதாய் தன் பூலோக மக்களுக்களித்த திருச்செபமாலை அவனிடம் இருந்தது.

எஸ். ஆர். ராஜபாலன்.

## தேவ அன்னைக்குப் புகழ்மாலை

("அருளின் சுனையே..." என்ற மெட்டு)

மாதா மாதம் வைகாசி
மலர்கள் நிறைந்த நல்மாதம்
மரியைப் போற்றும் பொன்மாதம்
மகிழ்ந்தே துதிப்போம் அவபாதம்.

●

அமரர் போற்றும் மாமரியே
அலகை தலைமிதித் தாண்டவளே,
பண்பால் பாலர் இந்நாளில்
[illegible]ரிந்தோம் கனிவாய் உந்தாளில்.

●

ஆதம் ஏவைசெய் பாவ
வினைகள் அகற்ற அந்நாளில்
ஆனன் சுவக்கின் நற்சேயாய்
பூவில் மலர்ந்த நறுமலரே.

●

சுரரும் நரரும் தொழுதேற்றும்
சுகந்த மரியே எந்தாயே
அன்பாய் எம்மை ஆதரியே
வறுமை தீர்த்துத் தாபரியே.

●

கற்பில் லிலி மாமலரே
அறிவில் சீரிய பெட்டகமே
ஆசீர் தந்து அரவணைப்பாய்
அடியோர் பவவினை தீர்த்திடுவாய்.

எ. கி. வி. பெர்னந்து,
ஏத்துக்கால்.

—*—

## ஓவியர் சொன்னகதை

லியனடோ டாவின்சி பேர்போன ஒருசித்திரகாரன். அவர் வரைந்த படங்கள் இன்றும் வியந்து பாராட்டப் படுகின்றன. அவர் ஒருமுறை யேசுநாதருடைய இராப்போசனப் படம்ஒன்றை வரையத்தொடங்கினர். உருவங்களைவரையத்தொடங்குமுன் அதற்குரியஆட்களைத் தேடி வைத்துக்கொண்டுதான் வரைவார். யேசுநாதரைப்போல் சாயல்உள்ள ஒருவரைத் தேடினர். முடிவில் ஒரு ஆள்கிடைத்துவிட்டார். இதேவிதமாகப் பெரும்பணம்கொடுத்து ஆட்களைத்தேடி உருவங்களை வரைந்தார். எல்லா அப்போஸ்தலர்களின் உருவங்களையும் வரைந்து முடிந்ததும் யூதாசின்சாயல் வரைவதற்கு யூதாசைப்போல் ஒருஆளைத்தேடிப்பிடிக்க வேண்டியிருந்தது.

சீர்திருத்தம்இல்லாத மக்கள்வசிக்கும் இடமெல்லாம் தேடிஅலைந்து பலநாட்களின்பின் ஒருமனிதனைத் தேடிப்பிடித்தார். தனதுவீட்டுக்கு அம்மனிதனை அழைத்துச்சென்று கையிலே ஒருகாசுப்பையைக் கொடுத்தபொழுதுதான் அவனை இந்த ஓவியர் அழைத்துவந்த காரணம் அவனுக்குத்தெரியவந்தது. சித்திரம் வரைந்துமுடிந்ததும் லியனடோடாவின்சி தான் அழைத்துவந்த மனிதனின் சீவியவரலாற்றைவிசாரித்தார். அவனே துக்கமடைந்தவனய் மிகவும் உருக்கமாகக் கூறியதாவது: "என்னை உமக்குத்தெரியாது; ஆனல் உம்மை எனக்குத்தெரியும். சிலநாட்களுக்கு முன்புதான் யேசுக்கிறீஸ்துநாதரின் உருவத்தை வரைவதற்காக என்னை அழைத்துவந்திர்" என்று கவலையோடு கூறினன் அவன்.

லியனடோ டாவின்சி அந்தமனிதனுக்கு மனந்திரும்பும்படி புத்திகூறி அனுப்பினர். இக்கதை நமக்கு ஓர் அரியபடிப்பனையைக் கற்பிக்கின்றது. மனிதன் நல்லவனய், பரிசுத்தமாய், உத்தமனய் இருந்தாலும், அவன் கெட்டுப்போவதற்கும் இடமுண்டு. எனவே, நாம் எப்பொழுதும் விழிப்பாய் இருக்கவேண்டும். பசாசுஎம்மைக் கெடுத்துவிட எப்போதும் கங்கணங்கட்டிக்கொண்டு, தருணம் பார்த்துக்கொண்டே இருக்கிறது.

எஸ். எம். ஜே.

## சிறுவரே காரணம்

எதற்குஎன்று என்னைக் கேட்கிறீர்களா? கீழேபடியுங்கள். தேவமாதாவின் வணக்கமாதம் எப்படி ஆரம்பமாயிற்று? என்றுகேட்டால் அதற்குக்காரணம் சிறுவர்தானும். இங்கிலாந்துதேசத்து சிறுவர்களுக்குத்தான் தேவமாதாவின் வணக்கமாதத்தை ஆரம்பித்துவைத்த பெருமையும் இருக்கிறதாம். அதைப்பற்றித்தான் இந்தக்கதை.

இங்கிலாந்துதேசத்திலே ஒருபிரதான வீதியின்அருகே தேவதாயாரின் திருச்சுரூபம்ஒன்று வைக்கப்பட்டிருந்தது. வைகாசிமாதம் இங்கிலாந்துதேசமெங்கும் பூக்கள்பூத்துக் குலுங்கும். தேவமாதாவின் திருச்சுரூபம்இருக்கும் வீதிவழியாகச்செல்லும் சிறுவர் தேவதாயாருக்குப் பூக்கள்சாத்தி வணக்கம்செலுத்தி வருவார்கள். நாளடைவில் சிறுவர்கூட்டம் அதிகரித்தது. இதைக்கண்டு பெரியவர்களும், பெற்ரோரும் தாமும் சேர்ந்து தேவதாயாருக்குப் பூக்களை வைத்து வணக்கம்செலுத்தத் தொடங்கினர். வருடங்கள் செல்ல வைகாசிமாதத்தில் இப்பக்திவளரத் தொடங்கியது. இதைக்கண்ட இங்கிலாந்து திருச்சபை அதிகாரிகள் தேவாலயங்களில் வைகாசிமாதத்தில் தேவதாயாரின் வணக்கத்துக்கு ஏற்பாடுகள் செய்தனர். இப்படித்தான் தேவமாதாவின் வணக்கமாதம் ஆரம்பமாயிற்ரும்.

—மேரி யசிந்தா

---

● செவ்வாய்க் கிரகத்திலே தண்ணீர் இருக்கிறதென்றும், அது பனிக்கட்டிஉருவத்தில் இருக்கிறதென்றும் தான்நிரூபித்திருப்பதாய் ருஷியவிஞ்ஞானிஒருவர் கூறுகின்றர். 1954, 1956, 1961-ம்ஆண்டுகளிலே செவ்வாய்க்கிரகம் பூமிக்குச்சமீபமாக வந்தபோது இதனை ஆராந்தறிந்ததாய் அவர்கூறுகின்றர்.

● சோவியற்ருஷியாவிலே லெனின்விவசாயக் கழகத்தின் தலைவராக விளங்கியவரும், 1958-ம்ஆண்டு லெனின்பரிசு பெற்றிருந்தவருமான லிசெங்கோஎன்ற பிரபலருஷிய விஞ்ஞானியும்தலைமைப்பதவியிலிருந்து தள்ளிவிடப்பட்டிருக்கிருர். ருஷியாவில் எவ்வளவுதான் களையெடுப்புகள் நடந்தாலும் ஆளும்கட்சிநிம்மதியாக வாழப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எங்கள் சத்துருக்களிடத்தில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்"

தம்முடைய நாமத்தால் நாம் எதைக்கேட்டாலும் பிதா அதைநமக்குத் தந்தருளுவாரென்று திவ்விய யேசுதாமே வாக்களித்திருக்கிறார். நம்முடைய பரிசுத்த மாதாவாகிய திருச்சபை எமக்குச் சொல்லக்கற்பிக்கும் செபங்களிலே அதிகம் சுருக்கமும, மிகஅருமையுமான செபம் **அர்ச்சியசிட்டசிலுவை மந்திரம்.** இச்சிறியசெபம் தமிழில்மாத்திரம் சொல்லப்படுகிறதா அன்றேல் பிறபாஷைகளிலும் சொல்லப்படுகிறதா என்று நான் அறியேன்.

இச்சிறிய செபமாவது: "அர்ச்சியசிட்ட சிலுவை அடையாளத்தினுலே எங்கள் சத்துருக்களிடத்தில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், எங்கள் சருவேசுரா பிதாவுடையவும், சுதனுடையவும, இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினுலே ஆமென்யேசு" என்பதே.

இதில் அநேக வேதஉண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பது சற்றே சிந்தித்துப்பார்த்தால் வெளிப்படையாகும. இச்செபத்தை நன்கு விளங்கிக்கொள்வதற்கு அதிலுள்ள சொற்களின் வரிசையை மாற்றியமைத்தல் உதவியாயிருக்கும். "எங்கள் சருவேசுரா! அர்ச்சியசிட்டசிலுவை அடையாளத்தினுலே எங்கள் சத்துருக்களிடத்திலநின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்பது முதலாம் பகுதியும், "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துச் சாந்துடையவும் நாமத்தினுலே ஆமென்யேசு" என்பது இரண்டாம்பகுதியுமாகும்.

நமது ஆண்டவர்தானே கற்பித்த பரமண்டலமந்திரத்தில் "எங்கள் பிதாவே" என்று நாம் தொடங்குகிறோம். அதேபோல் இச்செபத்திலும எமதுசெபங்களைச் சர்வலோகங்களையும் படைத்துக்காத்துவரும் தேவாதி தேவனைப்பார்த்தே "எங்கள்சருவேசுரா" என்று சொல்லுகிறோம். மேலும் அவரிடம் நாம்கேட்பவைகள் யாவற்றையும் அர்ச்சியசிட்டசிலுவை அடையாளத்தின்போல்கேட்கிறோம்.

தமிழ் இலக்கணம்பயின்றோர் "ஆகுபெயர்" என்னவென்றும், அது பதினறுவகைப்படுமென்றும் கற்றிருப்பர். அவற்றிலொன்று **கருவி**யாகுபெயர் என்றும் அறிவர். தேவசுதனுகிய யேசுக்கிறிஸ்துநாதர் தாம் உலகத்தை ஈடேற்றத் தெரிந்துகொண்ட கருவி சிலுவையே. போர்புரிவதற்கு ஒருபடைவீரன் எவ்வாறு துப்பாக்கியை உபயோகிக்கிருனே அதேமாதிரி உலகத்தின் பாவங்களைப்போக்கச் சிலுவைஎன்னும் ஆயுதத்தை—கருவியை யேசுபெருமான் பிரயோகித்தார். ஆகவே, சிலுவைஎன்று நாம்கூறும் கருவி யேசுஎன்னும் இரட்சகரையே குறிக்கிறது. ஆகவே, இச்சிறுசெபத்தில் நாம்கேட்பதை யேசுவின்நாமத்தாலேயே கேட்கிறோம். "நீங்கள் என்நாமத்தினுலே என்னத்தை என் நித்தியபிதாவிடம் கேட்டாலும் அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்று வாக்குப்பண்ணிய யேசுவின் பெயராலேயே எமது மன்ருட்டைக் கேட்கிறோம். ஆகவே, அதைப் பிதாவாகிய சர்வேசுரன் நமக்குத்தந்தே தீருவாரென்று நம்பியிருக்கலாம்.

"எங்கள் சத்துருக்கள்" யார் என்று ஆராயும்போது உலகம், சரீரம், பிசாசு என்றவிடை கிடைக்கின்றது. உலகம் பொதுவாக எம்மை லௌகீக சுக செல்வங்களை ஈட்டுவதில் புகுத்த முயல்கின்றது. காணி, பூமி, பொருள் பண்டம், ஆஸ்தி பாஸ்தி முதலியவற்றில் எமது எண்ணங்களைச் செலுத்திப் பரலோக வேலையாகிய எமது ஆத்தும இரட்சணியவேலையைப் புறக்கணிக்கப் பண்ணுகிறது. சரீரமோ ஒரு அர்ச்சியசிட்டர் கூறியவாறு, எமது "சகோதரக் கழுதை" போல எம்மை ஆசாபாசங்களில் ஈடுபடச் செய்து மோகபாவம், போசனப்பிரியம், குடிவெறி போன்ற இன்னேரன்ன ஆத்மீகஇன்னல்களை விளைவிக்கிறது. பசாசோ தன்னுல் செய்யக்கூடிய உபாயங்களையெல்லாம் செய்து கர்ச்சிக்கும் சிங்கம்போல யாரை விழுங்குவேனேவென்று எங்கும் அலைந்துதிரிந்து எம்மை விசேஷமாக அகங்காரம், காய்மகாரம், கோள் குண்டணி முதலிய பாவங்களில் விழுத்த முனைகின்றது. இம் மூவித சத்துருக்களின துமமாயவலைகளில்நாம் சிக்கிக்கொள்ளாது எம்மைக் காப்பாற்றுமாறு யேசுநாதரின் பேரால் பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொள்ளுகிறோம்,

மேலும் அர்ச்சியசிட்ட சிலுவை மந்திரத்தைச் சொல்லும்போது, எங்கள்மேல மூன்று சிறிய சிலுவை அடையாளங்களும், ஒரு பெரிய சிலுவை அடையாளமும் வரைகிறோம். இதை ஆராய்ந்து பார்க்குமிடத்து எமது நெற்றியின்மீது நாம் வரையும் சிறிய சிலுவைஅடையாளம் எமது எண்ணங்களை—சிந்தனைகளைத் தூய்மைப் படுத்துவதற்கே. சிந்தனைகளோ செயல்களாகப் பெரும்பாலும் மாறுகின்றன. ஆகவே, ஒருவனின் சிந்தனைகள் பரிசுத்தமாயிருப்பின் அவனிலே புண்ணியங்கள்தோன்றி விருத்தியடையும் என்பது பிழையாகாது. நமது வாயின்மேல் நாம்வரையும் சிறிய சிலுவைஅடையாளம், நாம் எமது நாவை—பேச்சைத் தூய்மைப் படுத்துவதற்கே. எமது வார்த்தைகள் எப்போதும் தேவனுக்கு உகந்தவையாயிருப்பின் எங்களால் கூறப்படும் அவலாதி, அவதூறு, அபாண்டவார்த்தைகள், தேவதூஷணங்கள், உதாசின வார்த்தைகள்யாவும் அற்றுப் போகும். அப்போது நம்முடைய பேச்சு எந்நேரமும் எல்லோருடனும் தேவனுக்கே உகந்தவையாய் இருக்கும் என்பதும் உண்மையே. நமது மார்பில் நாம்வரையும் சிறியசிலுவை அடையாளம், எமது இச்சைகளைத் தூய்மைப்படுத்துவதற்கே. பரிசுத்தமானநேசமாகிய தேவசிநேகம்—பிறர்சிநேகம் எம்மில்தோன்ற இவ்வடையாளம் உதவுகின்றது. எமது இருதயங்களில் ஊற்றெடுக்கும் ஆசைகளே எம்மைச் செயலில் புகுத்திவிடுகின்றன. நல்லவைகளை விரும்புகிறவன் நன்மையையே எப்போதும் கடைப்பிடிப்பான்.

மேலும் எம்மேல்போடும் பெரிய சிலுவை அடையாளத்தால் பிதாவாகிய சர்வேசுரனையும், சுதனுகிய சர்வேசுரனையும், இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனையும் மன்ருடி எமது விண்ணப்பத்தைப்பெற எத்தனிக்கிறோம். இன்னும்எம்மேல் நாம்வரையும் சிறிய சிலுவைகளும் அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவத்தைக் குறிக்கின்றன. பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவாகிய ஒரே சர்வேசுரன் எமது சத்துருக்களாகிய உலகம், சரீரம், பிசாசுஎன்பவைகளை ஜெயித்து, தரித்திரம், கற்பு, அமைச்சலஎன்ற மூவித புண்ணியங்களை அனுசரிக்க வரமருள்வார்களாக.

— பி. சவரிமுத்து

## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தாலும், அவர் திருத்தாயாரின் மன்ருட்டினுலும், அர்ச். ஆரோக்கியநாதரின்சலுகையாலும் எனது வருத்தங்கள் குணமாயின. இரந்துகேட்ட மற்றும்கருமங்கள் சித்தியாயின. இவற்றிற்கு நன்றியுடையவளுய் மேலும் வேறு கருமங்கள் அனுகூலமாகவும், சிறப்பாக நான் நன்மரணமடையவும் வேண்டி நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

யாழ்ப்பாணம்

## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| முதல்நன்மைக் குறிப்பிடம் ... | 40 |
| சிறுவர் குறிப்பிடம் ... | 60 |
| சின்னக் குறிப்பிடம் (4-ம் வ.) ... | 80 |
| ,, ,, (5-ம் வ.) ... | 80 |
| பெரிய குறிப்பிடம் (6-ம் வ.) ... | 75 |
| ,, ,, (7-ம் வ.) ... | 75 |
| ,, ,, (8-ம் வ.) ... | 75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் ... | 05 |
| மாணவர் கிறிஸ்தவபோதகம் ... | 1-25 |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I)... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-50 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-00 |
| ,, (தோல்) ... | 6-00 |
| முக்தித்திறவுகோல் (கலிக்கோ)... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| நித்திய சிவியம் (தமிழ்) ... | 2-00 |
| (ஆங்கிலம்) ... | 3-00 |
| இரா ஆராதனை ... | 25 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரச் சுருக்கம் ... | 05 |
| வேதாகம வாசிப்பு ... | 50 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| அர்ச். மத்தேயு சுவிசேஷம் ... | 1-50 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| அர்ச். பிலிப்புநேரியார் சரித்திரம் | 50 |
| மடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| திரு இருதய இராசாங்க ஸ்தாபனம் மட்டையில் ஒட்டிய படம் | 35 |
| மட்டையில் ஒட்டாதது | 20 |
| திருஇருதய இஸ்தாபன செபம் ... | 10 |
| சாங்கோபாங்க சுவாமிகள் ... | 1-00 |
| பசாம் (வியாகுல பிரசங்கங்கள்) ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| சிலுவைப் பாதை (சிறியது) ... | 05 |
| சதாசகாயமாதா நவநாள் ... | 20 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 4-50 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 1-00 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) | அச்சில் |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-00 |
| தருமஅப்பம் | அச்சில் |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேஞ அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் ... | 40 |
| திருச்சடங்குக் கோவை ... | 3-50 |
| ஆத்துமாக்களின் அழுகைக்குரல் ... | -500 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் ... | -500 |
| இலங்கும் மகிமைமுடி ... | 30 |
| தாய் கன்னிகை ... | 30 |
| அர்ச். வாரம் ... | 95 |
| தபசுகாலநிருபமும், சுவிசேஷமும் மலிவுப் பதிப்பு ... | 2-00 |
| உயர்ந்த பதிப்பு ... | 2-25 |
| பாலகயேசுவுக்குப் பெற்றோரின் காணிக்கை ... | 03 |
| நற்கருணை வீரன் ... | 05 |
| சுகிர்த செபங்கள் ... | 10 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

அதிபர்,
சஞ்சுசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. M. B. 8732

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காரைதீவு கிழக்கு
சண்முகம் கைம்பெண் சேதுப்பிள்ளை
வழக்காளி.

எதிராக, காரைதீவு
1. தம்பிப்பிள்ளை சோமசுந்தம்
ஷெ ஊர்
2. சிவக்கொழுந்து கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 8732-ம இலக்கவழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1962-ம்ஆண்டு ஆனிமீ 9-ம்உ சனிக்கிழமை முற்பகல் 9மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,090-ம் ரூபா 6,000-க்கு 28-3-52 தொடக்கம் 25-2-54வரை 2வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 359ரூபா 10சதமும்.

### காணிகள் விபரம்

1. காரைதீவக் கோயிற்பற்று களபூமி இறை "சாத்தாமந்தனை" பர. நி. இலா. பதினேறேமுச்கால் (ப.நி இ. 16¾). எல்லை: கிழக்கு — முருகர் சின்னக்குட்டிக்கும், மறுபேர்கட்குமுரிய ஆதனம். வடக்கு— முருகர் சின்னக்குட்டிக்குரிய ஆதனம். மேற்கு — வேலாயுதர் பொன்னம்பலத்திற்கும், பங்காளர்கட்கும், மறுபேர்கட்குமுரிய ஆதனம். தெற்கு — ஆறுமுகம் பெண் தெய்வானைக்குரிய ஆதனம். இதடங்கலும்.

2. ஷெஇறை "நாகாண்டிதோட்டம் அல்லது சாத்தான்தறை" சாந்தையும், சாத்தான்தறையும் பர. நில. இலா. இருபத்தெட்டு (ப. நி. இ. 28) இதில் வடக்குப்பாகத்தில் ப. நி. இ. 13நீச்சி மிகுதி பர. நில. இலா. பதினைந்து (ப. நி. இ.15) உம், வீடும், செய்பயிர் வான்பயிர்களும், கிணறும். எல்லை: கிழக்கு — கைபொ முங்கையும், சின்னத்தம்பி ஆறுமுகத்திற்குரிய ஆதனமும். வடக்கு — வழக்காளிக்குரிய ஆதனம். மேற்கு — ஆறுமுகம் சங்கரப்பிள்ளைக்கும், கந்தையா பெண் பொன்னம்மாவிற்கும உரியஆதனம். தெற்கு — முருகர் சின்னக்குட்டிக்குரிய ஆதனம். இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி,
காரைநகர் கொம்மிஷனர்.

1962-ம்ஆண்டு சித்திரைமீ 25-ந்திகதி

## நன்றித் துதி

வைத்திய சிகிச்சைகளுக்குமே குணமுருத எனது பேரனுக்கு உண்டாயிருந்த வருத்தம் அதிசயிக்கத்தக்கவிதமாக பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்கள் மன்ருட்டினுல் குணமாயது. மேலும் என்னில் தொடரப்பட்ட வழக்கிலும் வெற்றி பெற்றேன். எனவே இவர்களுக்கு எனதுநன்றியைத் தெரிவிப்பதுடன், இன்னும் எனது குடும்பத்தைப் பரிபாலிக்குமாறு இவர்களை இரந்துகொள்ளுகிறேன்.

ஏ. எம்.

ஊர்காவற்றுறை, கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## பாப்பரசர் அழைக்கப்படுகின்றார்

ஆசீர்வாதப்பர்சபைப் புதியஆச்சிரமத்தையும், கோவிலையும் ஆசீர்வதிக்குப்படியாய் மொந்தே கசிேனவுக்கு வருமாறு நியாமடாதிபராலே அருளப்பபாப்பரசர் அழைக்கப்பெற்றிருக்கிறார். சென்றமகாயுத்தத்திலே நடைபெற்ற அதிகம்கோரமான போர்களுள் ஒன்றில் அங்கிருந்துவந்தபழைய ஆச்சிரமம் அழிக்கப்படலாயிற்று. மொந்தே கசினோஎனும்இடம் ரோமைநகருக்குத் தெற்கே சுமார்80மைல் தூரத்திலுள்ளது. பாப்பரசர் அங்குபோகிறதாயிருந்தால் 9-ம்பத்திநாதபாப்பானவரது ஆளுகை (1846—1878) க்குப்பின் ரோமாபுரிமேற்றிராணியார் ஒருவர் செய்யும் அதிகம்நீண்டபிரயாணம் இதுவாயிருக்கும். ஆசீர்வாதப்பசபையின் பரிகாலகர் அருளப்பாப்பரசரே.

## ஐந்துகாயவரம்பெற்ற மாது தெரேசா நியூமன்

மேற்குஜேர்மனியிலே கொன்னேர்ஸ்றாத்எனும்கிராமத்தில் வசிப்பவளும, இரட்சகரின் ஐந்துதிருக்காய வரம் பெற்றவளுமான தெரேசா நியூமன் எனும்மாது இம்முறை பெரியவெள்ளிக்கிழமையன்று முந்தியவருடங்களிற்போன்று தனது கரங்களிலும், பாதங்களிலும், நெற்றியிலுமுள்ள காயங்களிலிருந்து பாடனுபவித்துக் கொண்டிருந்தாளென்று அவ்வூர்ப் பங்குக்குரவர் வண. யோசெவ் நேபர் சுவாமியார் தெரிவித்திருக்கிறார். கடந்தகாலத்திற்போன்று அவ்வளவு கடுமையாக இரத்தம்பெருகவில்லையென்றும் அவர்சொன்னார். இம்முறை இனசனர்மாத்திரமே அவளைப்பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள். ஏனெனில், அவள் அத்துணை சுகத்தாழ்வுடையவளாய் இருந்தாள். அவளுக்குவயது 64. சென்றகாலத்திலே அவள் பாடனுபவித்துக்கொண்டிருக்கும்போது யாத்திரிகர்கள் அவளுடையகட்டிலை வரிசைமுறையாகச்சென்று பார்த்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இம்முறை 400பேர்வரை அவளுடைய இல்லத்தின்முன்பாகக் குழுமிநின்று மவுனமாகச் செபஞ்செய்தபடி இருந்தார்கள்.

## வத்திக்கான் பொதுச்சங்கம்

இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம் ரோமைமாநகரிலே அர்ச். பேதுருவானவரின் மகாலயத்தில் வருகிறஐப்பசிமாதம் 11-ந்திகதியன்று ஆரம்பமாகவிருக்கிறது. கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாயிரம்வருடகால சரித்திரவரலாற்றிலே இருபத்தோராவது பொதுச்சங்கம்இதுவாகும். உலகின் சகலபகுதிகளிலுமிருந்து வரவிருக்கும்கருதினால்மார்,பத்திறியாக்குமார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், குருமாராகிய இரண்டாயிரம்பேரைக்கொண்ட குழுவினருக்கு வேண்டிய ஆயத்தங்களெல்லாம் தற்போது அங்கேசெய்யப்பட்டுவருகிறது. இந்தநாஸ்திக — விஞ்ஞானயுகத்திலே கத்தோலிக்கதிருச்சபையை மிகமோசமாகப் பாதிக்கும் அநேகவிஷயங்கள் பற்றிப் பொதுச்சங்கம் விசாரித்து, ஒருதொகையான தீர்மானங்களைச் செய்யும். விவாதிக்கப்படும் முக்கிய விஷயங்கள் இன்னும்அறியப்படாதபோதிலும் பொதுச்சங்கத்தின் பொதுநோக்கத்தைப் பரிசுத்தபிதாதெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றார். நல்மனமுள்ள சகலராலும் அத்துணைபெரும் ஆர்வத்துடன் ஆசிக்கப்படுகின்ற கிறிஸ்தவஉலகின் ஐக்கியத்தைநோக்கி முதல்பெரும்படியில்அடியெடுத்துவைப்பதே அதன் பொதுநோக்கமாகும்.

## மகாவிருத்தாப்பிய அதிமேற்றிராணியார்

உலகின் மகாவிருத்தாப்பிய அதிமேற்றிராணியாராகிய அல்போன்சோ கறின்சிஆண்டகை சமீபத்திலே தமது 99-வதுபிறந்தபெருநாளன்று ரோமைநகரிலே தாம் ஞானஸ்நானம்பெற்ற கோவிலிலே திவ்வியபூசை நிறைவேற்றினார். திருச்சடங்காசாரமுறைத் திருச்சங்கத்தின் இளைப்பாறிய செயலாளரான இவர் திவ்வியபூசையிலே முழந்தாளிட விதிக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் ஒருமுறைதானும் முழந்தாளிடத் தவறவில்லை. அப்போது மூக்குக்கண்ணாடிதானும் போட்டுக்கொள்ளவில்லை. அத்தருணம் ரோமைநகரின் பதில்விக்கார்ஜெனறலான கருதினால் லூய்ஜி திறக்கிளியா ஆண்டகை மற்றும்எட்டுக்கருதினால்மார் சமுகமளித்திருக்கப் பிரசங்கம்நிகழ்த்தினார். அருளப்பாப்பரசர் அவருக்குத் தாமாக எழுதியனுப்பிய திருமுகம்ஒன்றில் நீடியதும், எவருமேபின்பற்றத்தகுந்த நன்முன்மாதிரிகையுமான அவருடைய குருத்துவவாழ்க்கையைப் புகழ்ந்து பாராட்டியிருந்தார்.

## பாப்பரசரின் அனுதாபசிந்தை

அருளப்பபாப்பரசர் வெனிஸ்நகரிலே கருதினாலாய்இருந்தபோது அவரைப்பற்றிய சம்பவமொன்றைச் சமீபத்திலேஅந்நகர கத்தோலிக்கசேவைத் தலைவர் தெரிவித்து, "இந்தமகானின் இரகசியமெல்லாம் அவர்காட்டும் அன்பும்அனுதாபமும், தமதுமக்களுடன் நெருங்கியிருக்க வேண்டுமென்ற ஆவலுமே" எனக்கூறியிருக்கின்றார். எனதுமனைவியார் காலஞ்சென்றதையிட்டு நான் துக்கித்துக் கொண்டிருந்தவேளையிலே தம்முடைய சகோதரியையும் அப்போதுதானே இழந்து துயருற்றிருந்த கருதினால் றொங்கல்லிஆண்டகை தெலிபோன் மூலம்பேசிப் பின்வருமாறு எனக்குத் தெரிவித்தார். "நாளையதினம் கிறிஸ்மஸ். உமதுஇல்லத்திலே (மனைவியை இழந்ததால்) வெறுமையான ஒரு ஆசனத்தோடு நீர்கண்டுகொள்ளும் முதலாவதுகிறிஸ்மஸ் இதுவாகும். அதனால நாளைத்தினம் உமதுபிள்ளைகளுடன்வந்து நம்முடன்கிறிஸ்மஸ் விருந்தில் அமருவீரா?" என்பதே.

## ஒருதெருவிலே நான்கு குரவர்கள்

இங்கிலாந்திலே எஸ்ஸெக்ஸிலுள்ள றிப்ளிவீதி ஒரு குறுகிய தெருவாகும். இது கிராமப்புறத்திலுள்ளது. ஆனால், மரியாதையான மக்கள்வசிக்கும் ஓர் பகுதி. இங்கே கத்தோலிக்கர் அவமதிப்பாக நடத்தப்பட்டனர். ஏனெனில், இங்கிலாந்தில் அங்கிளிக்கன்சபையார்தான் தலைதூக்கிநிற்பவர்கள். என்றாலும் கடந்த பத்துவருடங்களிலும் நால்வர் கத்தோலிக்க குருமாராகியிருக்கின்றனர். இவர்களில் பிரசித்திபெற்றவர், லிவர்ப்பூல்நகர் அதிமேற்றிராணியாராகிய ஜோண் கார்மேல்கீனன் ஆண்டகை. இவருடைய சகோதரர் வண. பிரான்சீஸ் கீனன் சுவாமியார் எஸ்ஸெக்ஸிலுள்ள சட்வெல்கீத்என்ற விசாரணைப்பங்குக்குரவர்.

இவர்களுடைய வீட்டிற்கு எதிரே வாழ்ந்த கனன்பிறையன் போலிஅவர்கள் இப்போது லங்காஸ்றர் மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறார். அந்தத் தெருவின் அந்தத்திலவசித்த அல்பிறெட் புள்அவர்கள் சவ்வக் மேற்றிராசனத்திலே ஒருகுரவராகத் தொண்டாற்றி வருகிறார். இதைப்போலும் வேறு எந்தத்தெருவிலும் இப்படியான அழைத்தல்கள் இல்லையென்று சொல்லப்படுகிறது.

## வத்திக்கானிலே மணிக்குப் 18 மைல் வேகம்

வத்திக்கான்இராச்சியம் 109ஏக்கர் விஸ்தீரணமுடையது. மோட்டர்வாகனங்கள் வேகமாகப் பயணம்பண்ணுவதற்கு அங்குள்ள வீதிகள் தகுதியானவைகள் அல்ல. அங்கு அதிவிரைவாகச் செல்லக்கூடிய நேர்வீதிகளின் நீளம் 1,000 அடியே வத்திக்கானில் மோட்டர்வாகனங்களின் மணித்தியாலவேகம் 18மைலாக மட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. அதனால் அங்கே அதன் 33 வருடவரலாற்றில் ஒருமரணமாவது, அபாயகரமான காயங்களாவது ஏற்படவில்லையென்று பெருமையுடன் எடுத்துக்கூறப்படுகின்றது.

## லூர்துபதிக்கு யாத்திரைசெய்த இந்துசமயச்சிறுமி

லூர்துதிருப்பதிக்குப் பிள்ளைகளின் வருடாந்த தேசீயயாத்திரையில்கலந்து சென்றசித்திரைமாதம் 24-ந்திகதிசெவ்வாய்க்கிழமை லண்டனிலிருந்து புறப்பட்டுச்சென்ற பிள்ளைகளும், வளர்ந்தவர்களுமான 820 யாத்திரிகர்களிலே நரம்புவலி நோயால்வருந்தும் மீனு வீர்மாஎனும் 11 வயதுடைய ஓர்இந்துப்பெண்பிள்ளையும் இருந்தாள். இவளுடன் இவளுடையதாயும் சென்றாள். இவர்கள் டில்லிநகரைச் சேர்ந்தவர்கள். கடந்த ஒருவருடகாலமாக இவர்கள் பிரித்தானியிலே சஞ்சரித்துவருகிறார்கள். நோய்வாய்ப்பட்டவர்களும், உடல்நலம் குன்றியவர்களுமான 132 பிள்ளைகளைக்கொண்ட ஒருகோஷ்டியில் அடங்கியிருந்த கத்தோலிக்க சமயத்தைச்சேராத சுமார் பன்னிருவரில் இந்தச்சிறுமியும் ஒருத்தியாகவிருந்தாள். இவர்களின் பிரயாணத்துக்கென்று இத்தகையபிள்ளைகளின் யாத்திரைநிதியிலிருந்து பணம்வழங்கப்பட்டது. "நீங்கள் லூர்துதிருப்பதிக்கு ஏன் யாத்திரைபோகிறீர்கள்? என்று சிறுமியின்தாயான திருமதிவீர்மாவைக்கேட்டபோது, "கடவுள் கிரிஷ்ணனாக இருந்தாலென்ன, கிறீஸ்துவாக இருந்தாலென்ன அதைப்பற்றி நான் பறுவாய்பண்ணுவதில்லை; அவர் இன்றும் ஒரேகடவுளாகவே இருக்கிறார்; நான் அவரில் விசுவாசமாயிருக்கிறேன்; மதாபிமானப்படைத்த மக்களிடையே நான் தோன்றியுள்ளவள்; நாங்கள் உண்மையையே தேடுகிறோம்" எனப் பதிலிறுத்தனள்.

---

● ஆஸ்திறேலியாவிலே மெல்போன்நகரில்வசிக்கும் ஒருடேனிஷிய விஞ்ஞானியும், ஆஸ்திறேலிய அரசாங்கத்தின் ஆராய்ச்சிஸ்தாபனத்தில் கடமையாற்றி வருகிறவருமான டக்றர்போல் ஹான்சென்என்பவர் வெண்ணெயை மாவாகும்படிசெய்து வியாபாரப்பொருளாக்கும் நவீனமுறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அதனால் சமையலிலே வெண்ணெய்க்குப்பதில் இதனைப்பாவித்துக் கொள்ளலாம்.

● ஐப்பானியதேச ரோக்கியோ நகரிலே சென்றவெள்ளிக்கிழமை விடுமுறைகாரரை நிறைய ஏற்றிச் சென்ற பிரயாண றெயின்வண்டிகள் இரண்டுபாதையைவிட்டுவிலகியிருந்த சாமான்றெயின் வண்டி ஒன்றுடன் மோதியமையால் 148பேர்வரை இறந்தார்களென்றும், 384பேர் காயமடைந்தார்களென்றும், இவர்களில் 124 பேர் அபாயகரமான நிலைமையில் இருக்கிறார்களென்றும் செய்திகிடைத்திருக்கிறது.

## 2-வது வத்திக்கான் பொதுச்சங்கம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்றுவதாக எமது பரிசுத்த தந்தை 23-ம்அருளப்பபாப்பரசருக்கு இச்சங்கம்கூடி முடிவுபெறுமட்டும் நல்லதேவன் நற்சுகபலமளிக்க வேண்டுமென்று நாம் மன்றாடவேண்டும். ஏனெனில், திருச்சபைச் சட்டங்களின்படி ஒருபாப்பானவரால் தொடக்கப்பட்ட பொதுச்சங்கம் அவருடையகாலத்திலேயே நடைபெற்று முடியவேண்டும். துரதிர்ஷ்டவசமாக பாப்பரசர் மரணத்திரையில் மறையநேர்ந்தால் பொதுச்சங்கமும் பின்போடப்படவேண்டும். ஆகவே, விசேஷமாக எமது அநுதின பூசைநேரத்தில்—காணிக்கைச் செபவேளையில் "உமதுபரிசுத்த திருச்சபைக்கு ஒற்றுமையையும், சமாதானத்தையும் தாரும்; அது உலகமெங்கும் துரிதமாகப் பரவச்செய்யும்; திருச்சபையின் தலைவரான பாப்பரசர் 23-ம்அருளப்பர், எமதுமேற்றிராணியார் ஜெரோம், எமதுகுருமார், கிறீஸ்தவர்கள் எல்லோரையும் "பாதுகாத்தருளும்" என்று மனமார நாம் மன்றாடவேண்டும்.

---

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** கத்தோலிக்கருக்கும், பிரிந்திருக்கும் கிறீஸ்தவர்களுக்குமிடையே அதிகமான மதிப்பும், இன்னும் நுணுக்கமான விசாரணைகளும் உண்மை ஒற்றுமைக்காகிய வழியை ஆயத்தம்பண்ணத் தக்கதாய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** திவ்வியநற்கருணைமேல் நமக்கிருக்கும் ஆழமான பக்தியானது மிஷன் நாடுகளிலே குருத்துவ, சந்நியாச அழைத்தல்களை அதிகரிக்கச்செய்யுமாறு மன்றாடிக்கொள்வது.

* , * *

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

● நியூயோக்நகரிலே தரைமட்டத்தின்கீழ்ஓடும் றெயின்வண்டிகளிலே பிரயாணஞ் செய்கிறவர்கள் தாங்கள் பயணஞ்செய்யும் றெயின்வண்டிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு 21 பாஷைகளில் தலைகீழாக வரைந்து செய்யப்பட்டுள்ள விளம்பரங்கள்மூலம் கேட்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றிலே ஆங்கிலத்தில் தலைகீழாகவுள்ள ஒரு சுவரொட்டிவிளம்பரத்தைப் பிரயாணி ஒருவர் தலைகீழாகநின்று வாசித்தால் இது உங்கள்றெயின்வண்டி, அதை யிட்டுக் கரிசனைஎடுத்துக்கொள்" ளென்று வாசிப்பாராம்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 26, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday May 13-1962

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org